# பல்லவம்

பூநகரி பிரதேசசபையின் பல்லவராயன்கட்டு பொதுநூலகத்தினால்
வெளியிடப்படும் தேசிய வாசிப்பு மாத சிறப்பு சஞ்சிகை-2017

இதழ்: 02



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகவியலின் தந்தை
கலாநிதி எஸ்.ஆர்.இரங்கநாதன்
(1892-1972)




நூல்கள் அனைத்தும் பாவனைக்கே
நூலுக்கு ஏற்ற வாசகர்
வாசகருக்கு ஏற்ற நூல்
வாசகர் நேரம் பேணுக
நூலகம் வளரும் தன்மையுடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லவம்

## உள்ளே



- ஆசியுரை
- வாழ்த்துரை
- வாசகர்களின் ஆக்கங்கள்
- மாணவர்களின் ஆக்கங்கள்

பல்லவம் சஞ்சிகை தொடர்ச்சியாக வருடந்தோறும் வெளிவர பிரதேச நலன்விரும்பிகள், வாசகர்கள் அனைவரும் தமது பூரண ஒத்துழைப்பை நல்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நூலக சமூகம்

பொதுநூலகம்,பல்லவராயன்கட்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை........



செல்வி.இ.பிரபா

நூலக உதவியாளர்

பல்லவராயன்கட்டு

பொது நூலகம்

### நூலகமே வாழ்வின் தூண்கள்

மதிப்பிற்குரிய வாசகர்களே!

நல்ல நூல்களை வாசிக்க வேண்டும் என்று கூறுகிறார்கள். நல்ல நூல்களை எங்கு தேடுவது அதில் எவ்வாறு படிப்பது என்ற கேள்வி எழுந்திருக்கம். நல்ல நூல்களை தேடிப்பிடிக்கும் ஒரே இடம் நூலகமாகும். நூலகம் அறிவை வளர்க்கும் ஓர் இடமாகும். வாழ்வியல், வரலாறு, இலக்கியம், சிறுகதைகள், மனோதத்துவம், வாரமாத சஞ்சிகைகள், நாளிதழ்கள் போன்ற அனைத்து வகைகளும் நூலகங்களில் கிடைக்கும்.

வாசிப்பு என்பது ஒரு அழகான பயன்மிகுந்த பழக்கமாகும். நாமும் எமது எதிர்கால சந்ததியினருக்கும் இதனை புரிய வைக்க வேண்டும். ஆனால் தற்போது இலத்திரனியல் சாதனங்களினாலே எமது சந்ததிகள் வாசிப்பு பழக்கத்திலிருந்து பின்தள்ளப்படுகின்றனர்.

ஒரு நூல் நிலையத்தினால் அதனைச் சுற்றியுள்ள சமூகம் நன்மையடையும் வாசிப்பின் மூலம் நற்பண்புகளை வளர்த்துக்கொள்ள சமூகத்தில் தீயசெயல்கள் ஏற்படுவதற்கு வாய்பற்றுப் போகிறது. ஏன் சமூகத்தினருக்கு நூல் நிலையம் முக்கியம் பெறுகிறது எனின் எல்லோராலும் எல்லா நூல்களையும் பணம் கொடுத்து வாங்க முடியாது. நல்ல நூல்களை தேடிப்படிக்க வேண்டும்.

நூலகங்கள் ஒருவர் பலவகையான நூல்களை ஒரே இடத்தில் இருந்து படிப்பதற்கு உதவியாக உள்ளது. நாட்டு மக்களின் அறியாமை எனும் காரிருளை அகற்றி மக்களின் மனதில் இன,மத பேதங்களை விலக்கி புரிந்துணர்வுகளையும் ஒற்றுமையும் மக்களிடையே ஏற்படுத்தி மனக்கவலையை விலக்கி ஓய்வு நேரத்தை பயனுள்ளதாக கழித்து மக்களின் மனதில் அறிவு என்னும் பேரொளியை கொடுத்திடும் புனிதமான இடமாக நூலகங்கள் அமைகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாசகர்களாகிய நம்மில் யார் நல்ல நூல்களைத் தேடிப்படிக்கின்றோமோ அவர்களே தங்கள் வாழ்க்கையினை அழகாக்கிறார்கள். எமது வாசிப்பு பழக்கததை சுவாசிப்புப் போல மனிதனை மனிதனாக வாழவைக்கும். வாசிப்பு பழக்கத்தை போற்றி நல்ல நூல்களை தேடிப்படித்து நாமே நமது வாழ்க்கையை அழகிய நந்தவனமாக மாற்ற முடியும். வாசகர்களாகிய நாமும் எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்து நூல்களைத் தேடிப்படிக்க வேண்டும். வாசிப்புத்திறனை வளர்த்து வாழ்க்கை எனும் நீண்ட கடினமான பயணத்தை இலகுவாக்கி சுகமாக கடப்பதற்கு நூல்நிலையங்கள் எமக்கு உறுதுணையாக இருக்கின்றன. எனவே கற்ற நூல்களின் பொருளறிந்து அதனூடு சிறந்து வாழ வேண்டும். அந்தவகையில் நாமும் வாசிப்புப் பழக்கததை தூண்டும் வகையில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பல போட்டிகள் கலைநிகழ்வுகள், புத்தகக் கண்காட்சி என பல போட்டிகளை நடத்தி வருகிறோம். இலை மறை காயாக இருக்கும் வாசகர்களின் ஆற்றலை மேம்படுத்தும் வகையில் பல்லவம் சஞ்சிகை இதழ் 02 ஐ வாசிப்பு மாதத்தில் வெளியிடுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

மேலும் சிறந்த முறையில் ஒவ்வொருவரிடமும் தேசிய வாசிப்பு மாதம் பல்லவம் சஞ்சிகை வெளியிட அனைவரது ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு இம்மலரை வெளியிடுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எனது உளம் கனிந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றேன்.

"நல்ல புத்தகங்கள் நல்ல கனவுகளை வளர்க்கும்

நல்ல கனவுகள் நல்ல எண்ணங்களை உருவாக்கும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசியுரை....

ஜோதிடமாமணி சிவஸ்ரீ சே. மகேந்திரகுருக்கள்
ஸ்ரீ சிவயோகசித்திநாயகர்
தேவஸ்தான பிரதம குரு
பல்லவராயன் கட்டு



அன்பு நிறைந்த நெஞ்சங்களின் ஒன்றாகவே உணர்வுகள் பிறப்பது போல அறிவு நிரம்பிய சிந்தனைகளிலும் எண்ணங்கள் பல தெய்வாதீகமாக மலர்வதுண்டு. அன்பும் அறிவும் உற்றாகிய பல்லவம் என்னும் இந்நூல் யாவருக்கும் பெரும் பயன்தரக்கூடிய முயற்சி எனக் கூறி இம்முயற்சியை செய்ய முன்வந்தவர்களைப் பாராட்டி மேலும் பல நூல்கள் வெளியிட இறைவன் அருளும் திடகாத்திர சுகமும் கிடைக்க வேண்டுமென இறைவனை வேண்டி எனது நல்லாசியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துரை....



சிவஞானம் சிறீதரன்.
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,
இணைத்தலைவர்
ஒருங்கிணைப்புக்குழு,
கிளிநொச்சி மாவட்டம்.

### பல்லவம் தொடர்ந்து பரிணமிக்க வாழ்த்துக்கள்

வாசிப்பு என்பது ஒரு மனிதனை வளமாக்கும் மிக அரிய சாதனம் என்பது உண்மை. அத்தகைய வாசிப்பை சமூகத்திற்கு வழங்குகின்ற அளப்பரிய பணி நூலகங்களுக்கே வழங்கப்பட்டிருக்கிறது. உலகின் எழுச்சியுற்ற சமூகங்கள் அனைத்துமே அறிவு என்ற அத்திவாரத்திலிருந்து எழுப்பப்பட்டவையே! அத்தகைய அறிவுக்கு அடிப்படை வாசிப்பே என்பது உலகியல் உண்மை.

பள்ளிக்கல்வி வேலைக்கான உத்தரவாதம் என்று நம்புகின்ற எமது இளம்சமூதாயம் வாசிப்பு என்பது அறிவு விருத்திக்கான அடித்தளம் என்று நம்பமறுத்து, தமக்கான இருபத்துநான்கு மணிநேரங்களையும் இணைய மேய்ச்சலுக்குள் இரையாக்குவது வருத்தமளிக்கிறது. எது எவ்வாறிருப்பினும், இன்றளவும் வாசிப்பை நாடும் ஆர்வலகர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள், என்பதையும் ஏற்கத்தான் வேண்டும். அத்தகைய ஆர்வலர்களின் அறிவுப்பசிக்கு தீனி போடும் இடங்களில் ஒன்றாய் இயங்கிவரும் இந்நூலகம் தேசிய வாசிப்பு மாத்தை முன்னிட்டு “பல்லவம்” என்னும் சஞ்சிகையை தனது பல்பரிமாணங்களில் ஒன்றாய் வெளியிட்டுவைப்பது உவகையளிக்கிறது.

“பல்லவம்” வெளியீடு சிறந்து தொடர்ந்து பரிணமிக்கவும், இப்பொதுநூலகம் தன் கல்வி, சமூகப்பணிகளை தடையின்றி வழங்கவும் எனது வாழ்த்துக்களையும், ஆசிகளையும் வழங்கி வைப்பதில் பேருவகை அடைகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை....



திரு. ந.பிரபாகரன்

உள்ளூராட்சி உதவி

ஆணையாளர் கிளிநொச்சி

வாசிப்பு மனிதனை பூரணமாக்கின்றது என்பது யாவரும் அறிந்ததே. அந்தவகையில் வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வெளிவரும் பல்லவம் சஞ்சிகையின் வருகை ஆரோக்கியமான தொன்றாகும். இன்றைய காலகட்டத்தில் வாசிப்பு என்னும் அரியகலை அருகி வருவது மிகுந்தவேதனைக்குரியது. சிறுவயது முதல் வாசிப்பில் ஆர்வம் ஏற்படுத்தப்பட வேண்டும் அதற்காகப் பெற்றோரும் ஆசிரியர்களும் இச் சமூகமும் அரும்பாடுபட்டு உணர வேண்டிய கால கட்டத்தில் நாமுள்ளோம்.

தற்போது வளர்ந்து நவீனதொடர்பாடல் சாதனங்களால் மாணவர்கள் திசைமாறிப் போகின்ற நிலைமையை வாசிப்பு ஒன்றாலேயே மாற்றியமைக்க முடியும். இதற்காகப் பிரதேசசபைகளின் கீழ் இயங்கும் நூலகங்கள் நல்ல முறையில் செயற்பட்டு நல்ல நூல்களைத் தேர்ந்து எடுத்து இளையதலைமுறையினருக்கு வழங்கவேண்டியது தலையாயபொறுப்பாகும்.

நூலகங்களின் வளர்ச்சி ஒரு சமூகத்தின் வளர்ச்சியைக் காட்டும். எங்கே நூலகங்கள் தம் பணியைச் சிறப்பாகச் செய்து வருகின்றதோ அங்கே தான் ஆரோக்கியமான அறிவுள்ள சமூகத்தைக் காணமுடியும்.

அந்தவகையில் வாசிப்பினை நேசிக்கும் சமூதாயத்தை உருவாக்கிடப் பணியாற்றிய திருப்தியைப் பெற்றும், வாசிப்பினை நேசிக்கத் தூண்டிய மகிழ்ச்சியை அடைந்தும் பல்லவம் வளம்பெற வாழ்த்துகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதேச செயலாளரின் வாழ்த்துரை .......



சி.ச. கிருஷ்ணேந்திரன்
பிரதேச செயலாளர்
பூநகரி.

பல்லவத்துக்கு வாழ்த்துக்கள் ..

பல்லவம் சஞ்சிகைக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அறிவு மாற்றம் காலத்தின் மாற்றமாக உணரப்படும் இக்காலப்பகுதியில் வாசகரின் அறிவுப்பசிக்கு தீனி போடும் வகையில் இத்தகைய சஞ்சிகைகள் வெளியிடப்படுவது பாராட்டப்பட வேண்டிய விடயமாகும். பூநகரி பிரதேச சபையின் பல்லவராயன்கட்டு பொது நூலகத்தின் அயராத முயற்சியில் இச்சஞ்சிகை வெளிவருவது சமூகத்தின் பால் அவர்கள் கொண்ட அக்கறையின் வெளிபாட்டை நிலைநிறுத்துகிறது. வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான். என்ற வாசகத்திற்கு அமைவாக வாசிப்பு மாதத்தை முன்னிட்டு இத்தகைய சஞ்சிகைகள் வெளிவருவது அறிவுத்தேடலை விருத்தி செய்வதுடன் வாசகர்களின் இலை மறைகாய்களாக பல எழுத்தாளர்களின் ஆக்கங்கள் வெளிவருவதில் "பல்லவம்" இதழ் 02 வெளிச்சத்துக்கு கொண்டு வரும் என்பதில் என் நம்பிக்கை

பல்லவம் இதழ் தொடர்ந்து வெளிவந்து பிரதேச மக்களின் அறிவுப்பசிக்கு ஆகாரமாக வேண்டும் என வாழ்த்துவதோடு இச்சஞ்சிகையை வெளியிடும் பூநகரிப் பிரதேசசபை செயலாளர், மற்றும் பல்லவராயன்கட்டு பொதுநூலக சமூகத்தினருக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



திரு.சு.தர்மரத்தினம்
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
கோட்டக்கல்வி அலுவலகம்
பூநகரி

## பூநகரிக் கோட்டக்கல்விப் பணிப்பாளரின் சிந்தனையிலிருந்து

இலங்கையின் வடபுலத்தில் பூநகரி மண்ணில் பல்லவராயன்கட்டு புராதன கிராமங்களில் ஒன்றாகும். நாகதேவன் துறை முகபப்பட்டணம், மாதோட்ட துறைமுகப்பட்டணம் சிறந்து விளங்கிய காலத்தில் பல்லவராயன்கட்டு பேரோடும் புகழோடும் விளங்கிய கிராமங்களில் ஒன்றாகும். இலங்கையின் வடபல மன்னர் ஆட்சிக்காலத்தில் மூத்த குடிகள் வாழ்ந்த பிரதேசமாக பல்லவராயன்கட்டு விளங்கியிருக்கிறது. யாழ்ப்பாண வைபவமாலை பல்லவராயன் கட்டின் சிறப்பையும் , எழிச்சியையும் எடுத்துக்கூறுகின்றது. இந்தவகையில் பூநகரி பிரதேச சபையின் தென்கிழக்குப் பகுதியில் இயக்கும் பல்லவராயன்கட்டு உப அலவலகம் வருடாவருடம் வாசிப்புமாத போட்டிகளை மாணவர்களுக்கு நடாத்தி விழா எடுப்பது மட்டுமல்லாது "பல்லவம்" என்ற ஒரு இதழையும் வெளியிடுவது மிகவும் பாராட்டுதற்குரிய ஒரு விடயமாகும். அந்த வகையில் இப்பகுதி கல்வி அதிகாரி என்ற வகையில் பாராட்டுகின்றேன்.

மாணவர்களையோ மக்களையோ பொறுத்தமட்டில்

"பாலைவனம் எனத்தெரிந்த பின்பும் அங்கு தண்ணீர் பெற காத்திருப்பது மடத்தனம்

இரவில் பறப்பது ஈசல் எனத்தெரிந்த பின்பும் அதை விடிந்ததும் பார்க்கலாம் எனபுரண்டு படுப்பது மடத்தனம்

அரசியல்வாதி எனத் தெரிந்திருந்த பின்பும் அவர் கொடுத்த வாக்குறுதியை நம்பி இருப்பது மடத்தனம்

எனவே கிடைக்கின்ற வளங்களைக் கொண்டு முன்னேறுவதே புத்திசாலித்தனம். அதை விடுத்து கிடைக்காததை எண்ணி கவலைப்படக் கூடாது.

அடுத்த மக்களைப் பொறுத்தமட்டில் "புலிவாழும் காட்டில் தான் மான்களும் வாழ்கின்றன. பாம்பு வாழும் புற்றில் தான் எறும்புகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்கின்றன. முதலைகள் வாழ்கின்ற குளத்தில் தான் மீன்களும் வாழ்கின்றன.

அதே போல கயவர்களும், முட்டாள்களும் வாழ்கின்ற நாட்டில் தான் நல்லவர்களும் வாழ்கின்றனர். எனவே புத்தியை சந்தர்ப்பத்திற்கு ஏற்ற வகையில் பாவித்து வாழப் பழகிக் கொள்ள வேண்டும்.

"முட்டி முட்டி முளைக்கும் விதைகளால்
முயன்று முயன்று முன்னேறும் - நதிகளாய்
கொண்ட இலட்சியத்தில் உறுதிபட
உழைத்து உயர வேண்டும்.

மாணவர்கள் பரிசில் பெறும் இந்நாளில் ஒரு சிறிய குட்டிக்கதை.

"ஒரு பால் குவளைக்குள் இரண்டு தவளைகள் தவறுதலாக விழுந்து விட்டன. ஒன்று முயற்சி செய்யாமல் செத்து விட்டது. மற்றது தனது சிறிய கால்களால் முயற்சி செய்து கடும் முயற்சி காரணமாக பால் வெண்ணைய் திரண்டு வந்த போது தவளை வெளியே பாய்ந்து சென்றது". எனவே மாணவர்கள் முயற்சி செய்ய வேண்டும். என பாராட்டும் இவ் வேளையில் திரும்பவும் அடுத்தவருடம் முயற்சி செய்ய வேண்டும் என வாழ்த்துகின்றேன். அடுத்து வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்.

தவறுகளை திருத்தவதன் மூலம் ஒரு மனிதன் மறுபிறப்பெடுக்கின்றான்.

செயல்களை ஆற்றுவதன் மூலம சாதனைகளைப் படைக்கின்றான்.

சாதனைகள் மூலம் புது உலகத்தை தோற்றுவிக்கின்றான்.

எனவே எமது சமுதாயத்தை பொறுத்தமட்டில் சாதாரண பேருந்துகளில் முதியவர்கள், அங்கவீனர்கள், கர்ப்பிணிகள், மதகுருமார்கள் வருகை தரும் போது எம்மவர்கள் எழுந்து சீற் கொடுக்க தயங்குகின்றனர். சாதாரணமாக மடியில் இருத்தக்கூடிய பிள்ளைகளுக்கு தாய்மார் இடம் பிடித்து சீற்றில் அமர்த்துகின்றனர். அதே நேரம் இராணுவத்தினர் இவர்களுக்கு எழுந்து சீற்கொடுப்பதை தன் இனத்திற்காக தன் சமூக சகோதரிக்காக தன் உயிரை துச்சமாக மதித்து பல ஆயிரம் வீரர்கள் மாண்ட இந்த மண்ணில் இந்த இனத்திற்கு உள்ளுணர்வு வரவில்லை என்றால் இதற்கு காரணம் பள்ளிக் கூடங்கள் மட்டுமல்ல வீட்டு வளர்ப்பே காரணமாக அமைகின்றது. இவ்வாறான சுயநல சிந்தனைகளிலிருந்து விடுபட எல்லோரும் உழைக்க வேண்டும். அதற்கு எதிரியாக இருந்தாலும் இலவசமாக கிடைக்கும் வார்த்தைகளையும் வன்சொற்களையும் பாவிப்பதை தவிர்க்க வேண்டும். இதற்கு ஒட்டுமொத்த சமூகமும் உழைக்க வேண்டும் என கேட்டு நிற்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துரை........

திரு.மு.இராஜகோபால்
செயலாளர்,
பிரதேச சபை,
பூநகரி.

### பல்லவம் மலரட்டும்

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பூநகரி பிரதேச சபையின் பல்லவராயன்கட்டு உப அலுவலக நூலகத்தால் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கும் நிகழ்வுகளின் சிறப்பம்சமாக பல்லவம் சஞ்சிகை வெளியிடுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

பல்லவம் இரண்டாவது இதழாக இவ்வாண்டு வெளியிடப்பட்டுள்ளது. கடந்த வருடம் இதன் முதலாவது இதழ் வெளியிடப்பட்டபோது வாசகர் மத்தியிலும் பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் பெரும் மதிப்பையும் வரவேற்பையும் பெற்றுள்ளது.

பல்லவராயன்கட்டு பிரதேச எல்லைக்குள் உள்ள பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு வெளிவரும் இப்பல்லவம் அவர்களின் கற்றல் செயற்பாட்டுக்கு மேலதிகமாக பிரத்தியேக ஆற்றல்களை வெளிக்கொண்டு வர இச்சஞ்சிகை உதவும் என நம்புகின்றேன்.

கடந்த ஒக்டோபர் மாதம் இடம்பெற்ற வாசிப்பு மாத நிகழ்வுகளை முன்னிட்டு மாணவர்கள் மத்தியிலும் வாசகர்கள் மத்தியிலும் நடாத்தப்பட்ட போட்டி நிகழ்வுகளில் தெரிவு செய்யப்பட்ட கவிதை, கட்டுரைகள், ஆக்கங்கள் இவ்விதழில் இணைத்திருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

தேசிய ஆவணமாக்கல் சபையினால் 2016 ஆம் ஆண்டுக்கான விருது வழங்கல் நிகழ்வுகளில் இந்நூலகத்திற்கும் விருது கிடைக்கப்பெற்றமைக்கு அவ்வாண்டு முதன்முதலாக வெளியிடப்பட்ட இப்பல்லவம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இச்சஞ்சிகையானது தொடர்ந்து வெளிவர எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதோடு இந்நிகழ்வுகளை நடாத்த பெரிதும் உதவிய பாடசாலை சமூகத்திற்கும், நூலக சமூகத்திற்கும் இப்பிரதேச சபையின் உத்தியோகத்தர்களுக்கும் பணியாளர்களுக்கும் எனது சார்பிலும் பூநகரி பிரதேச சபையின் சார்பிலும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

"பல்லவம் பூத்துக்குலுங்க வாழ்த்துக்கள்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துரை

அ.சசிகுமார்,
சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்,
பி/உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
கிளிநொச்சி.

கிளிநொச்சி மாவட்டத்தில் தொன்மையான வரலாறுகளைக் கொண்டமைந்த பூநகரிப்பிரதேசத்தின் உள்ளூராட்சி மன்றமான பூநகரிப் பிரதேச சபையின்கீழ் இயங்கும் பல்லவராயன்கட்டு உப அலுவலக பொதுநூலகத்தினால் 2017ம் ஆண்டு வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு வெளியிடப்படும் "பல்லவம்" எனும் சஞ்சிகையின் 2வது இதழுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பகுதிவாழ் மக்களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை இயன்றவரையில் வழங்கிக்கொண்டிருக்கும் பூநகரி பிரதேசசபையின் பல்லவராயன்கட்டு உப அலுவலகமானது அதன் உள்ளூராட்சி சேவையின் ஒரு அங்கமாக மாணவர்களது கல்வி வளர்ச்சிக்காக பொதுநூலகத்தை சிறப்பாக நடாத்திவருவது போற்றுதற்குரியது. 2016ம் ஆண்டு சிறந்த நூலகத்திற்கான தேசிய விருது முதன்முதலாக இந்நூலகத்திற்கு கிடைத்தமையானது இதனை வெளிப்படுத்திநிற்கின்றது. நூலகரின் உயரிய சிந்தனையாலும் அயராத உழைப்பினாலும் வெளிவரும் "பல்லவம்" என்ற இச்சஞ்சிகை இப்பகுதி மக்களின் வரலாறுகள், பாரம்பரியங்களை வெளிக்கொணரும் அதேவேளை இப்பகுதி மாணவர்கள், எழுத்தாளர்களின் ஆற்றல்களையும் வெளிக்கொண்டுவருவதற்கான ஓர் கருவியாகவும் இருப்பது மக்களுக்கு கிடைத்த ஓர் வரப்பிரசாதம் ஆகும்.

இச்சஞ்சிகை வெளிவர முன்னின்று உழைத்த நூலகர், உப அலுவலக பொறுப்பதிகாரி மற்றும் ஆக்கமும் ஊக்கமும் வழங்கிய பிரதேச சபையின் செயலாளர் அனைவரும் பாராட்டப்படவேண்டியவர்கள். இச்சஞ்சிகை ஒவ்வொருவருடமும் புதிய புதிய சிந்தனைகளுடன் வெளிவர இறைவன் ஆசீர்வதிக்கவேண்டும் என்பதுடன் எனது உளமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வாழ்த்துரை....

ப. செந்தில்நாதன்,
பொறுப்பதிகாரி,
பிரதேசசபை,
உப அலுவலகம்,
பல்லவராயன்கட்டு.

**இளமையில் கையாளும் வாசிப்பு பழக்கமே ஆரோக்கியமான சமூகத்தின் சின்னம்.**

கருவறை தொடக்கம் கல்லறை வரையான செயற்பாட்டில் பூநகரி பிரதேசசபையின் உன்னத சேவையின் ஓர் அங்கமாகும். பல்லவராயன்கட்டு பொதுநூலகம் கல்வியின் ஒளி விளக்காக திகழ்ந்து பொது மக்கள், மாணவர்கள், வாசகர்களிடையே "உள்ளங்கையில் நெல்லிக்கனிபோல" தெட்டத் தெளிவாக ஒவ்வொரு வாசகர்களின் எண்ணங்களிலிருந்து வடிக்கின்ற ஓர் கருப்பொருளாக திகழ்ந்து இரண்டாவது மலரான இப் பல்லவம் சஞ்சிகை வாசகர்களுக்கு மிகவும் பயனுடையதாக இதழ் விரித்து நிற்கின்றது.

பல்லவராயன்கட்டு பொதுநூலகத்தில் வாசிப்பின் முக்கியத்துவத்தினை உணர்த்தி ஒவ்வொரு வருடமும் வாசகர்களின் ஆளுமை விருத்திக்கு பல்துறை சார்த்த விடயங்களை உள்ளடக்கி இவ் 02 வது சஞ்சிகை மலர் வெளிவருவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

வாசிப்பு இல்லாத மனிதன் கிணற்றுத் தவளை போன்றவன் எனலாம். வாசிப்பு பழக்கம் இல்லாதவர்கள் வாழ்க்கையின் பாதி சுகத்தை இழக்க நேரிடுகின்றது. நல்ல விடயங்களை தேடி வாசிப்பதன்மூலம் அன்பும் ஆதரவும் சமூக நற்பண்புகளும் புரிந்துணர்வும் விருத்தியடையும்.

பொருளாதார சமூக அபிவிருத்திக்கு ஒரு முதலீடாகவும் மானிட மேம்பாட்டிற்கான ஒரு திறவு கோலாகவும் கல்வி கருதப்படுகின்றது. அந்தவகையில் இப் பொதுநூலகமானது 2017வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பல்வேறு போட்டிகளை மாணவர்கள், வாசகர்களிடையே நடாத்தி சிறந்த பெறுபேற்றை பெற்றவர்களுக்கும், புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் எமது நூலகத்தில் அங்கத்தவர்களாக இருந்து பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களையும் கௌரவிக்கின்ற நிகழ்வாகவும் அதனோடிணைந்த சமூக பண்புகளை விருத்தி செய்கின்றதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்கப்படுத்துகின்றதுமான நிகழ்வாகவும் வாசிப்பு மாத இறுதி நிகழ்வு அமைகின்றது. 2017ம் ஆண்டு தேசிய வாசிப்பு மாதத்தை அனுஸ்டிப்போம். வாசகர்கள்களின் கல்வியறிவை பெருக்குவோம். எனும் தொனிப்பொருளில் மேற்படி நிகழ்வுகள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இவ்வருடம் 4000க்கு மேற்பட்ட நூல்களையும். 240 அங்கத்தவர்களையும் கொண்டு இப்பிரதேசத்தில் ஓர் முதன்மை நூலகமாக விளங்குவதுடன் எமது வாழ்வை இனிமை செய்யவல்ல நூல்களையும் தேடி கற்று நூலகங்களை முழுமையாக பயன்படுத்தி இளமையிலேயே வாசிப்பு பழக்கத்தை விருத்தி செய்து கொள்ள வேண்டும்.

வாசிப்பினை கருப்பொருளாக கொண்டு வாசகர்களின் அறிவுத் திறன், ஆளுமையினை வினைத்திறனுடன் விருத்தி செய்வதுடன் பல்லவம் சஞ்சிகை சிறப்பாக ஒவ்வொரு வருடமும் மலர இறைவனை பிரார்த்தித்து இச்சஞ்சிகை மலர வழியமைத்த அனைவருக்கும் எனது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசிப்பை நேசிப்போம்

மனிதர்களாகிய நாம் நல்ல செயல்களிலும் நல்ல சிந்தனைகளிலும் ஈடுபட வேண்டும். அவ்வாறு நாம் மேம்படுத்தவும் புத்தகம் ஒரு சிறந்த கருவியாக உள்ளதால் ஏப்ரல் 23 ஆம் நாளை உலக புகழ் புத்தக தினமாக கொண்டாடுவது என்று 1955ம் ஆண்டு நடைபெற்ற யுனெஸ்கோவின் 28வது மாநாட்டில் முடிவு செய்யப்பட்டது.

வாசித்தல் புதிப்பித்தல் மற்றும் பதிப்புரிமை மூலமாக அறிவுசார் சொத்துக்களை பாதுகாத்தல் போன்றவற்றை வளர்க்கும் நோக்குடன் இந்நாள் உலக புத்தக மற்றும் பதிப்புரிமை நாளாக கொண்டாடப்படுகிறது. கதை சொல்லுபவர் இல்லாமல் போயிருந்தால் கடந்த காலம் தெரியாமல் போயிருக்கும். புத்தகங்கள் இல்லையென்றால் நிகழ்காலம் கூட இறந்த காலமாக மாறிவிடும். ஆயுதத்தின் வலிமையைவிட சக்தி வாய்ந்த புத்தகங்கள், திறவுகோல் கல்வி அறிவை வளர்க்கவும் உலகிலுள்ள பல்வேறு கலாசார தகவலை தெரிந்துகொள்ளவும் புத்தகம் உறுதுணையாக உள்ளது.

கடவுள் குடிகொள்ளும் இடங்கள் தெய்வக்கோயில் என்றால் புத்தகங்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ள இடமான நூலகம் அறிவுத்திருக்கோயில் என்று நம்முன்னோர் குறிப்பிட்டுள்ளனர். தற்போது எல்லாப் பாடசாலைகளிலும் நூலகங்கள் உள்ளன. நூலகத்திலுள்ள புத்தகங்களை எடுத்து படிக்க பெற்றோர்கள் ஊக்குவிக்க வேண்டும். நாளைய நவீன உலகை கட்டமைக்கப்போகும் சிறுவர்,சிறுமியர்களுக்கு உலக புத்தகங்களை பரிசாக அளிப்போம்.

தங்கள் குழந்தைகள் பாடப்புத்தகத்தை மட்டும் படித்தால் போதுமென்று பெற்றோர் சிலர் நினைக்கின்றனர். கதைப்புத்தகங்களையோ, செய்தித்தாள்களையோ படித்தால் அதை சில பெற்றோர்கள் கண்டிக்கின்றனர். சிறந்த புத்தகங்கள் பல்வேறு உலக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டால் அப்போது தான் அது அனைத்து தரப்பினரையும் சென்றடையும்.

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு பிறந்தநாள் பரிசாக பொருட்களை வாங்கித்தருவதை தவிர்த்து நல்ல பத்திரிகைகளையோ, புத்தகங்களையோ வாங்கிக்கொடுக்க வேண்டும். விழாக்காலங்களில் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் புத்தகங்களை பரிசாக அளிப்போம் என்று திடசங்கற்பம் பூணுவோம்.

"வாசிப்பதால் மனிதன்
பூரணமடைகின்றான்"

கு.துவாரகன்
பல்லவராயன்கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்பே உயர்வு தரும்

வீட்டிற்கு வெளிச்சம்
சாளரத்தின் ஊடே....
அறிவிற்கு வெளிச்சம்
வாசிக்கும் நூலே.......

வாசிக்காமல் யாருக்கும்
வளர்வதில்லை அறிவு!
இதனை நேசிக்காமல் போனால்
வளர்ச்சிக்கே முறிவு!

பொது அறிவு பெற்றிடவே
புத்தகங்கள் நீ வாசி!
அறிவுள்ள புத்தகங்களை
அத்தனையுமே நேசி!

அடிமைகளின் சூரியனாம்
ஆபிரகாம் லிங்கனுமே
அமெரிக்க குடியரசு தலைவரென்று
ஆக்கி உயர்த்தியதும் புத்தகமே

மாணவப் பருவத்திலே
பாடப் புத்தகங்களில் வாசிப்பு
தேசச்சரித்திரத்தினையும் தொட வைக்கும்
வாசிப்பு சாதிக்க வழி வகுக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊருலகம் யாவும் யாவும்
சுற்றி அறிய காலம் கொள்ளும்
புத்தகங்கள் அனைத்து விளக்கமும்
கற்றறிய குறுகிய காலம் போதும்

இருந்த இடத்தில் எல்லாம் அறிய
கையடக்க நூலே போதும்
கற்றறியும் ஒழுக்கமிருந்தால்
சுடர் விடும் உன் அறிவெப்போதும்

கற்பனை உலகிற்கே நம்மை
இட்டுச் செல்லும் புத்தகங்கள்
முளைக்கும் சிறகு முளைக்கும்
மூவுலகும் இட்டுச் செல்லும்

நூலகங்கள் சென்று வர
நாளும் நீ தவறிடாதே!
நுண் மதியை பெருக்கு வைக்கும்
நூல் கற்க மறந்திடாதே!

புதுப்பித்துக் கொள்ள நீயும்
புத்தகங்கள் வாசித்தே பழகு – உன்னை
புதுப்பிக்க புதுப்பிக்க
புறந்தள்ளாது இந்த உலகு

ம.பிரியங்கா
கிளி/ஜெயபுரம்ம.வி
தரம் -11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Reading Engages Your Imagination

Reading is still the best source of information available and it can give you a great edge and distinct advantages in life.The secret to a successful life is information; the answers to nearly all our problems are documented in text somewhere.As mark Twain quoted," The man who does not read has no advantage over the man who cannot read".Story books can engage you in a world which is miles apart from our own, here you can have a glimpse of what goes on in the lives of many fictional characters.

When you engage your curious mind in a book, you can experience empathy, sympathy & compassion with these make belive characters, this shows the power of your imagination as you bring these people and their experiences to life.You can travel anywhere in a book and you get to meet and engage with the author and their fantasy worlds.Fiction books will allow you to use your imagination to paint your own version of the images, characters places. Reading requires you to use your crative imagination, stories stimulate curiosity and they intrigue you, books are the best way of stirring your creativity and absorbing knowledge.

Reading is one of the cheapest forms of entertainment; it is even free on the internet or libraries. it can stimulate your analytic thinking abilities and skills. When you read a story, your mind will jumb ahead of you, and it will try and work out and second guess the developing plot or mystery

When you read a book, you will expand your awareness and knowledge each book or article will make you wiser and more intelligent. Reading works the memory and helps to improve your concentration, It helps to exercise and boost your memory powers because it encourages you to remember character and facts. Reading will also help to improve your vocabulary and if you enjoy writing, well written books will help you to improve your own writing abilities."Reading & Learing are so critical to success , and a lack information will keep you small & Limited".

Thank you

**Miss . Perumal Sivasanthy (LLB)**
**University of Jaffna.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகி வரும் தமிழர் கலாசாரம்

உலகின் மூத்த குடிமக்களான தமிழர்கள் சிறந்த கலாசாரத்தையும் பண்பாடுகளையும் கொண்டு எல்லா இன மக்களுக்கும் முன்மாதிரியாகவும் எல்லோராலும் மதிக்கப்படுகின்ற இனமாகவும் விளங்கினார்கள். இதனை பாரதிதாசன் "தமிழன் என்றொரு இனம் உண்டு அவற்றிற்கு தனக்கொரு மதிப்புண்டு அமிழ்தம் அவனுடைய மொழியாகும் அன்பே அவனுடைய வழியாகும்" என கூறுகின்றார்.

பண்டைக்காலத் தமிழர்கள் பஞ்சமா பாதங்களை செய்வதற்கு அஞ்சுகின்ற புண்ணிய சீலர்களாக வாழ்ந்ததாக புராண இதிகாசங்களும் ஔவையாருடைய நீதி நூல்களும் திருக்குறளும் இயம்புகின்றன. புராணங்களும் இந்த நூல்களும் காலத்தின் கண்ணாடிகளாகும். இவற்றைப்படிப்பதன் மூலமாக பண்டைத் தமிழன் எப்படி வாழ்ந்தான் என்பதை இலகுவாக அறிந்து கொள்ளலாம். அரிச்சந்திர புராணம் தமிழன் பொய் பேசுவதற்கு அஞ்சியதை தொழிலாக எடுத்துகாட்டுகிறது. மனுநிதிச் சக்கரவர்த்தியின் புராணம் ஒரு பசுக்கன்றை தற்செயலாகக் கொன்றமைக்காக தனது மகனையே தேர்க்காலில் இட்டு கொன்று நீதியை நிலைநாட்ட எண்ணிய கொலைத் தொழிலை எவ்வாறு வெறுத்தார்கள் என்பதை கூறகிறது. பாரி எனும் அரசன் முல்லைச்செடிக்கு கொழுகொம்பில்லாமல் தவித்த போது தனது தேரை அதற்கு ஈந்து விட்டு சென்றமை தமிழர்களின் வள்ளல் தன்மையை பறைசாற்றி நிற்கின்றது. பண்டைய தமிழர்கள் பெண்களைத் தெய்வமாக பார்ப்பவர்களாவும் பிறர் மனைவியை ஏறெடுத்து பார்க்காதவர்களாயும் விளங்கினார்கள்.

இதனை கம்பராமாயணத்தில் வருகின்ற இராமபிரான் ஏகபத்தினி விரதத்தை கடைப்பிடித்தார் என்பதன் வாயிலாக அறியலாம். பண்டைய தமிழர்கள் மதுவை வெறுத்தார்கள் என்பதை திருவள்ளுவரின் "உண்ணற்க கள்ளை" என்னும் திருக்குறள் வாயிலாகவும் அறியலாம் களவு செய்வதற்கு தமிழர்கள் அஞ்சினார்கள் என்பதுடன் அதனை செய்பவர்களிற்கு என்ன தண்டனை என்பதை கொற்கைப் பாண்டிய மன்னனின் கதை தெளிவாகக் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டைய தமிழ் மாதர்கள் எப்படி தங்களையும் தற்காத்து சமூகத்தையும் வாழவைத்தார்கள் என்பதை திருவள்ளுவரின்

"ததற்காத்து தற்கொண்டாள் தகை சான்ற

சொற்காத்து சோர்விலாள் பெண்"

என்ற குறளின் மூலமாக அறியலாம். அதாவது பெண்ணானவள் அடக்கமாக வாழ்வதன் மூலம் தன்னையும் காத்து சமூகத்தில் கற்பரசி என்கின்ற நற்பெயரையும் காத்து வாழ்பவள் பெண் என திருவள்ளுவர் கூறுகின்றார். பெண்கள் எப்படி வாழவேண்டும். பண்டைய மாதர்கள் எப்படி வாழ்ந்தார்கள் "என்பதை ஔவையாரின் "நாற்குணமும் நாற்படையாய் ஐம்புலனும் நல்லமைச்சாய் ஆர்க்கும் சிலம்பே அணிமுரசாய் வேற்படையும் வாளுமே கண்ணாய் ஆளுமே பெண்மை அரசு" என்கின்ற பாடல் சிறப்பாக கூறுகின்றது. அதாவது பெண்களுக்கு அச்சம், மடம், நாணம், பயிற்ப்பு என்கின்ற நாற்குணமும் ரதம், கஜம், துரகம், பதாதி என்கின்ற படைகளுமாய் மெய், வாய், கண், மூக்கு, செவி என்கின்ற ஐம்புலன்களும் நல்ல மந்திரிகள் (அமைச்சு) எனவும் காலிலே அணியப்பெற்று இசையை எழுப்புகின்ற சிலம்பு படைகள் எழும்புகின்ற முரசப்பறை எனவும் அவர்களுடைய கண்கள் வேல்வாள் என்கின்ற படைக்கருவிகள் எனவும் வாழ்ந்து உலகை அரசாழ்பவர் என ஔவையார் கூறுகின்றார். இதன் மூலம் பண்டைய மாதர்கள் இப்படி வாழ்ந்தார்கள் என்பதை அறியலாம். திருவாத புராணத்திலே திருப்பெருந்துறைச் சருக்கத்திலே திருவாதவூரர் திருப்பெருந்துறைக்கு போகும் போது அவ்வூரின் வளத்தினையும் அங்கே வாழ்கின்ற பெண்களின் பழக்கவழக்கங்களையும் திருவாதபுராணத்திலே கூறும் போது "ஏன்ற குலமாதர் தமதிறைவர் முகம் நாடில் அவர் வான்தகைய முகம் என்ன வளைந்து விளைந்தன செந்நெல்" என கூறுகின்றது. அதாவது தஞ்சாவூரில் உள்ள வயல்களில் நெற்கதிர் முற்றி விளைந்து தலை சாய்த்து நிற்பது அவ்வூரில் வாழ்ந்த பெண்கள் தங்களின் கணவர்மார் தமது முகத்தை நேரே பார்த்த போது தலையை சாய்த்து நிற்பதை உவமையாக கூறுகின்றது. இது அக்காலப் பெண்களின் சிறந்த பழக்க வழக்கங்களுக்கு எடுத்துக்காட்டாக அமைகின்றது. கந்த புராணத்திலே வருகின்ற ஒரு பாடல் அக்கால பெண்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்பதை கச்சியப்ப சிவாச்சாரியார் "காவல் மன்னவன் இறந்தனன் எனும் உரை கன்னத்துள் மேவும் எல்லையில் அசனி ஏறுண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெம்பணியே போல் தேவியாகிய பதும கோமளை எனும் திருநங்கை ஆவி நீங்கினன் தலையளியாகியததுவன்றோ'' என்றும் புராணத்தின் வாயிலாக தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். அதாவது சூரபதுமன் இறந்து விட்டான் என்கின்ற செய்தி அவனுடைய மனைவியாகிய மதுமகோமளை என்கின்ற பெண்ணின் செவித்துவாரத்தை வந்தடைந்தவுடனேயே அவள் இடியோசையை கேட்ட நாகம் எப்படி இறந்த போகின்றதோ அதுபோல் அவளும் இறந்து விட்டாள். தலையாய கற்ப என்று சொல்லப்படுவது அதுவன்றோ என கச்சியப்ப சிவாச்சாரியார் எடுத்துக்காட்டுகிறார்.

இப்படி பண்டைக்கால பெண்களின் பண்பாட்டை புராணங்கள் கூறும் போது மக்கள் ஜிவ காருண்யத்திலே எப்படி சிறந்து விளங்கினார்கள் என்பதற்கு சிபிச்சக்கரவர்த்தி கதை சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. அதாவது ஒரு வேடன் ஒரு புறாவைப்பிடித்து தனது உணவிற்காக கொண்டு செல்வதைக் கண்ட சிபிச்சக்ரவர்த்தி அந்த புறாவிற்காக தனது உடலிலே இருக்கின்ற தசைகளை அறுத்து கொடுக்க முற்பட்டான்.

இவைகள் எல்லாம் பண்டைத் தமிழர்களை சிறந்த பண்பாட்டையும் கலாசாரங்களையும் பறைசாற்றி நிற்கின்றன. தற்போது தமிழர்களின் வாழ்க்கை முறை முற்றாக மாற்றமடைந்து விட்டது. இது தமிழ் இனத்தின் அழிவிற்கும் எம்மினத்தை வேற்று இனத்தவர் அடிமைப்படுத்துவதற்கும் அடிப்படைக் காரணமாக அமைந்து விட்டது. தமிழன் சிறந்த கலாசாரம் சிறந்த பண்பாடு உடையவனாக இருந்தால்தான் தமிழர்களுக்கும் அவர்களின் மொழிக்கும் மதிப்பு இருக்கும். இதற்கு உதாரணமாக பண்டைத்தமிழர்களால் எழுதப்பட்ட "திருக்குறளை" எடுத்துக்கொள்ளலாம் திருக்குறள் பல மொழிகளில் பல இன மக்களாலும் விரும்பி வாசிக்கின்ற மதிக்கின்ற நூலாக இருப்பதை நாம் காண்கின்றோம். தமிழன் இப்படி பஞ்சமா பாதங்களை செய்யத்ததுணிகின்ற சமுதாயமாக மாற்றமடைவதற்கு அடிப்படை காரணங்கள் என்ன என்பதை ஆராய வேண்டிய கடப்பாடடு உடையவர்களாக நாம் இருக்கின்றோம். இதற்கு அடிப்படைக் காரணமாக தற்கால கல்விமுறையும் முக்கிய காரணிகளாக அமைகின்றது. எனவே ஆட்சியாளர்கள் இவற்றை தமிழர்களின் நலனை கருத்திற்கொண்டு சில மாற்றத்தை செய்ய முன்வரவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன். சினிமாவில் வருகின்ற ஆபாசக் காட்சிகளை தடை செய்து தமிழர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய உடைகளை காட்சிப்படுத்த வேண்டும். மேல் நாட்டு உடைகளை கலாசாரங்களை சினிமாவில் புகுத்துவது எமது இனத்தையே அழித்து விடும். எனவே அக்காட்சிகளை கட்டுப்படுத்த வேண்டும். தகவல் தொடர்பு சாதனங்களுக்கும் சில கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். கல்விமுறையில் நீதி நூல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். பெரியவர்களின் வாழ்க்கை முறை கல்வி பாடப்புத்தகங்களில் முக்கிய இடம் வகிக்க வேண்டும். இவற்றின் மூலம் எமது கலாசாரத்தில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பது எனது திடமான நம்பிக்கை.

கோ.அரியநாயகம்
ஓய்வுபெற்ற கிராம அலுவலர்
M.O.H. வீதி
ஜெயபுரம்

---

## விவேகானந்தரின் பொன் மொழிகள்

செல்வம் படைத்தவன் செல்வம் இல்லாதவன் மேல்
செலுத்தும் ஆதிக்கத்தை தவிர்க்க வேண்டும்.

அறிவுடையவன் அறிவு குறைந்தவன் மேல் செலுத்தும்
ஆதிக்கத்தை விடவேண்டும்.

பாவம் என்ற ஒன்று உண்டென்றால் அது நான்
பலவீனமானவன் மற்றவர்கள் பலவீனமானவர்கள்
என்று சொல்வது ஒன்றுதான்

எவரிடமிருந்தும் எதையும் எதிர்பார்க்காதே
வந்த உதவிகள் எல்லாம் உனக்குள் இருந்தவையாகத்தான் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலுவூட்டல் - முன்பள்ளிச் சிறார்கள்

வலு என்பது உறுதி உறுதியை நாம் எங்கே எப்போது யாருக்கு ஏன், எதற்கு செய்கிறோம் என்ற கேள்விகளை கொடுக்கும் போது எமது முன்பள்ளி பிள்ளைப்பருவ சிறார்களுக்கு நாளைய தலைவர்களாக உருவாக்கும் அத்திவாரம் முன்பள்ளிப்பிள்ளைபருவ செயற்பாடு என்பது மிகையாகாது.

அந்த வகையில் முன்பள்ளிச் சிறார்கள் ஒரு குடும்பத்திலிருந்தே வலுவூட்டம் பெறுகிறார்கள். 3 - 4 வயது சிறுவர்களை எடுத்துக் கொண்டோமானல் அவர்களின் தேடல், அன்பு, அரவணைப்பு, பாதுகாப்பு இதனை நாம் சரியாக வழங்கினோமேயானால் இச்சிறார்களின் வளர்ச்சியில் நாம் முக்கிய பங்கை எடுத்துக் கொண்டோம் என்ற எண்ணம் சாத்தியப்பாடாகும். உ+ம் 3.5 வயது சிறார்களை நாம் எப்படி வலுவூட்டம் பெறச் செய்கின்றோம். இப்பருவத்திலே தான் எதிர்கால கல்விக்கு அத்திவாரம் இடுகின்றோம். அதேநேரம் பிள்ளையின் கல்விக்கு பெற்றோரின் ஒத்துழைப்பும் ஆதரவும், பொதுநோக்கமும் சேவை மனப்பாங்கும் கூடவே பிள்ளைப்பருவ வளர்ச்சிக்கு அத்திவாரமிடுகின்றன. இதேவேளை சமூகம், முன்பள்ளி, பாடசாலை என இப்பிள்ளையின் வளர்ச்சியில் அனைவரின் பங்கும் மிகவும் காத்திரமானவை. ஒரு வெற்றுத்தாள் எப்படி பயன்படுத்துவது, அவ்வெற்றுத்தாளினை சரிப்படுத்த முடியும் என்று பல கோணங்களில் சிந்தித்து மிகவும் பக்குவமாக கரும்புள்ளி ஏற்படாத வகையில் வெற்றுத்தாளை கையாள வேண்டும் தட்டிக்கொடுத்து ஊக்கமளித்தலின் மூலமும் அவர்களின் தன் நம்பிக்கையை வளர்த்தெடுக்கவும் ஆளுமை மிக்க ஒரு மனிதனாக உருவாக்கவும் முடியும். இதைத்தான் உளவியலாளர்கள் தேவைக்கூம்பின் அடிப்படையில் நோக்குமிடத்து அடிப்படைத் தேவைகள், பாதுகாப்புத் தேவைகள், அன்புத் தேவைகள், சுயகண்காணிப்புத் தேவைகள், சுயதிறன் நிறைவடைதல் என அடிப்படைத் தேவைகளை உள்ளடக்கி சிறார்களின் வளர்ச்சிப்படியை நிலை நிறுத்தி உள்ளார்கள் உளவியலாளர்கள் அதனைத் தான் ஒரு கண்ணாடியைப் போல் சிறார்களையாளும், பெற்றோருக்கும், சமூகத்திற்கும், ஆசிரியர்களுக்கும் பாரிய பொறுப்பு உள்ளது. சிறார்களின் வளர்ச்சியில் அவர்களின் ஆளுமை பன்மடங்கைப் பெறுகின்றது. சிறார்களின் வயதிற்கேற்ப உடல், உள. ஆன்மீக செயற்பாட்டினை விருத்தி செய்வதன் ஊடாக சிறார்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநம்பிக்கை ஏற்பட்டு வயதிற்கேற்ற செயற்பாடுகளை வெளிப்படுத்துவார்கள். வீட்டிலும், முன்பள்ளியிலும் சமூகத்திலும் சிறார்களுக்குரிய அந்தஸ்தை வழங்கி சிறார்களால் கேட்கப்படும் கேள்விகளுக்கு பொறுமையுடன் பதிலிறுத்தல் அவர்களின் வளர்ச்சிப்பாதைக்கு மேலும் வித்திடும். மேலும் சிறார்கள் ஒவ்வொருவரையும் பெயர் சொல்லி அழைப்பது கெட்டிக்காரர்கள் செய்யக் கூடிய ஆற்றல் உள்ளது. செய்து முடிப்பார்கள் என்ற நம்பிக்கையை ஊட்டுவதன் மூலம் அவர்களை மிளிரச் செய்வதோடு வயதிற்கேற்ப பொறுப்புக்களை வழங்கி தலைமைத்துவப் பண்பை வளர்ப்பதன் மூலம் மேலும் ஒரு படி உயரச் செய்யலாம். வெற்றி தோல்வி இரண்டையும் சரிசமனாக ஏற்றுக்கொள்ளும் உரிய பண்பை மேம்படுத்தவும் உங்களால் முடியும் என்ற சொற்பிரயோகத்தை மேற்கொள்ளும் போது அவர்களின் சுயகணிப்பீடு விருத்தியடையும். பெற்றோரும் ஆசிரியர்களும் பின்னூட்டல் வழங்குவதனால் அப்பிள்ளைக்கு ஏற்படும் மகிழ்வும் தேடலும் ஆர்வமும் எதிர்காலத்தில் ஏற்படும் சவால்களை எதிர்கொண்டு வெற்றி பெறுவது உறுதியாகும். ஒவ்வொரு பிள்ளைக்கும் அவர்களுக்குரிய உரிமைகளையும் அனைத்து அடிப்படைத் தேவைகளையும் கூர்ந்து கவனிப்போமானால் ஒவ்வொரு சிறார்களையும் நாம் எதிர்கால தலைவர்களாக உச்சத்திற்கே கொண்டு வரமுடியும். இதுவே நாம் நாளை உருவாக்கும் வெற்றியின் முதற்படியாகும்.

**S.வசந்தி**

**திருச்சிலுவை முன்பள்ளி**

**ஜெயபுரம் தெற்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்பின் மூலம் வெற்றி காண்போம்

மனிதனின் அறிவு வளர்ச்சிக்கும் சிந்தனை சக்தியின் எழுச்சிக்கும் வாசிப்பு இன்றியடையாதது. பாடசாலைகளில் மாணவர்கள் கற்கவும், ஆசிரியர்கள் கற்றவற்றை கற்பிக்கவும் வாசிப்புத் துணை புரிகிறது. இன்று பாலர் கல்வி, ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்கல்வி, முதியோர்கல்வி போன்றவற்றிற்கு வாசிப்பு அடிநாதமாக அமைத்து அனைவரது அறிவு வளர்ச்சிக்கும் வித்திடுகிறது. வாசிப்பானது பக்க பலமாயுள்ளது. வாசிக்கும் போது விளங்கி, கிரகித்து வாசிக்க வேண்டும். அப்பொழுதுதான் அதில் கூறப்பட்டுள்ள விடயங்கள் மனதில் பதியும்.

இந்த வாசிப்புத் தன்மையை ஆரம்பத்திலிருந்து அதுவும், ஏடு தொடக்கிய நாளிலிருந்து பாலர் கல்வியை மாணவர்கள் மத்தியில் வளர்க்க வேண்டும். எனவே மாணவர்களது வாசிப்புத்திறனை ஊக்குவிப்பதற்கும் அதிகரிப்பதற்கும் கிரகித்தலை ஊக்குவித்தும், சிந்தனா சக்தியையும் வளர்த்துக்கொள்ளவும் நூலகங்கள் இதற்கு துணைபுரிகின்றன.

கல்விக்கு பயன் அறிவு, அறிவுக்குப் பயன் ஒழுக்கம், என்பது நாவலர் பெருமானின் கருத்தாகும். "அறிவுடையவர் எல்லாம் உடையவர் என்பது நம் முன்னோர் அளித்த வாக்காகும். அறிவு இல்லாமல் மனித வளர்ச்சி இல்லை. மனிதனது அறிவு ஆற்றலை விருத்தி செய்ய வாசிப்பு இன்றியமையாதது. வாசிப்பதன் மூலம் மனிதன் மனிதனாகப் பூரணத்துவமடைகின்றான். இப்படியான அறிவை விருத்தி செய்யும் பிரதான ஊடகம் வாசிப்பு எனலாம். எனவே வாசித்தலை ஒரு சுவையான அனுபவமாகக் கொண்டு அதனை உற்சாகப்படுத்த வேண்டும். தற்காலத்தில் நிமிடத்திற்கு நிமிடம் வெடித்து பரவும் அறிவு வளர்ச்சி, தகவல்களின் பெருக்கம், விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சி என்பவற்றையும் பற்றி மனிதன் அறிய வேண்டுமாயின் வாசிப்பை ஊக்குவிக்க வேண்டும். பிரதானமாகப் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்க வேண்டும்.

பாடசாலைப் படிப்பை முடித்துப் பின் பயனுள்ள மனிதனாக நடமாடும் போது கல்வியை கற்க வேண்டும். வாசிக்க வேண்டும். கல்லாதது கைமண்ணளவு என்பதை மனதாரக் கொள்ள வேண்டும். கல்வியினது அபிவிருத்திக்கு நூல்கள் சாதனமாகவும் கட்புல சாதனமாகவும் அமைந்துள்ளன. நூலகங்கள் மூலமாக புத்தகப்பண்பாடு வளர்ச்சி ஏற்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதன் மூலம் வாசிப்பு செயற்பாடானது பிரதான இடத்தைப் பிடித்துள்ளது. வாசிப்பதனால் நமது அறிவு வளர்ச்சியடைவது மாத்திரமல்லாது மனப்பாங்கிலும் மாற்றங்கள் ஏற்பட்டு நாம் வளர்ச்சியடைய வாய்ப்பளிக்கின்றது. இந்த நூல்களைப் பயன்படுத்த மாணவர்களது சிந்தனை சக்தியானது. உணர்வு பூர்வமாக தூண்டி விடப்படுகின்றன. வாசிப்பானது மனிதனது உரிமையாகும். இது சிறுவரது உரிமையுங் கூட. எனவே இந்த வாசிப்பை வழங்காது மறுப்பது உரிமை மீறலாகக் கருதப்படும். இந்த நூலகங்கள் தகவல்களைத் தரக்கூடியது. இதை மாணவர்களது அறிவுத்தேடலின் மூலவளமாக கருதலாம். வளர்ந்தோர் கூட நூலகத்தை அறிவு தேடலுக்காக ஆய்வுத் தேவைக்காக பயன்படுத்தப்படுவது கண்கூடு.

அன்று நூல்களை மாத்திரம் கொண்டிருந்த நூலகங்கள் இன்று நூல்கள், சஞ்சிகைகள், ஆவணங்கள், கட்புல, செவிப்புல சாதனங்களான வானொலி, தொலைக்காட்சி, கணினி, இணையம் போன்றன உள்ளடக்கிய புதிய கருவிகளுடன் கூடிய நவீன அறிவியல் ஆய்வு கூடங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. மனித விழுமியங்களை பண்பாட்டை விஞ்ஞான வளர்ச்சியை கலாசாரப்பற்றை ஊட்டக்கூடியவையாக நூல்களும், சஞ்சிகைகளும், பத்திரிகைகளும் இன்று வெளிவிடப்படுகின்றன. இவற்றை வாசித்து அறியக்கூடிய ஒரு திடலாக இந்த நூலகங்கள் அமைகின்றன. விளையாட்டுக்கு விளையாட்டுத்திடல் எவ்வளவு முக்கியமோ அதேயளவு மனித வளத்திற்கும் அறிவுத் தேடலுக்கும் நூலகங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

எனவே வாசிப்பின் முக்கியத்துவத்தைச் சகலரும் உணர வேண்டும். இதற்காக நாளாந்தம் தங்கள் இலக்குககளை அடைய வாசிப்பதைத் துணை கொள்ள வேண்டும்.

இ.பார்த்தீபன்
சமுதாயஞ் சார் சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம்
மாந்தை கிழக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உங்கள் எதிர்காலத்திற்காக..........

நான் எழுத நினைத்த விடயம் தகவல் தொழினுட்ப அறிவின் முக்கியத்துவம் பற்றியே. ஆனாலும் அதனை தலைப்பாக இட எனக்கு மனம் இடமளிக்கவில்லை. ஏனெனில் தலைப்பை வாசித்து விட்டு அடுத்த பக்கம் தட்டிச் செல்பவர்கள் பலர். (நானும் சில சமயங்களில் அதைதாங்க செய்தன்) இந்த விடயம் தொடர்பான ஊக்குவிப்பு நம் பிரதேசம் அன்றி நமது கிளிநொச்சி மாவட்டம் பூராகவும் வழங்கப்பட வேண்டிய ஒன்றே. இதற்கு எமது பல்கலைக்கழ மாணவர்களால் முன்னெடுக்கப்பட்டு விடுகிறது. இருப்பினும் அதற்கு முன் எழுத்து வடிவிலும் சில அறிவுரை என்னால் இயன்ற அளவுக்கு.....

அறிவாற்றல் (knowledge) என்பத வெறுமனே ஏதாவது தெரிந்து கொள்ளுதல் என்பதை தாண்டி அதை எமது அன்றாட வாழ்வில் பிரயோகப்படுத்துதல் எனலாம்.

நமது பிரதேசத்ததை எடுத்துக்கொண்டால் இங்கு தகவல் தொழினுட்ப அறிவு என்பது மந்த நிலையிலே இருக்கின்றது. (ஆனா எல்லாருடைய வீட்டிலயம் குறைஞ்சது ஒரு ஸ்மாரட் பொன் (Smartphne) சரி இருக்கும் ஸ்மார்ட்பொன் பாவனைக்கு எமது பிரதேசத்திலம் பஞ்சமில்லை ஆனாலும் அது வெறுமனே முகநூல் (face book) பாவனைக்கும் வாட்ஸ்அப் (whatapp) போன்ற பாவனைக்கும் பயன்படுத்தப்பட்டாலும் ஒருசிலர் ஆபாச படங்களைப் பார்க்கப் பயன்படுத்துவதும் வெட்கிக்க வேண்டிய விசயம் (09 வருட காலங்களுக்கு முன் எப்படி இருந்தோம் என்பது மறந்து விட்டது போலும்) குறிப்பாக வளர்ந்து வரும் சமுதாயத்திடம் தொழில்நுட்ப அறிவு என்பது என்பது மிகவும் அவசியமானது (இது கடையிலோ, பரம்பரையில் இருந்தோ வரவே ஏலாது பொது சாதாரண தரத்தில் பாடதெரிவின் போது தொகுதி பாடத்தெரிவில் 3வது தொகுதியில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் எனும் பாடம் இருப்பதையே பெரும்பாலான மாணவர்கள் கருத்திற்கொள்வதில்லை. (அப்படியே ஒருத்தன்/ ஒருத்தி எடுத்தாலும் பயமுறுத்தி விடுகிறது. அது 'முழுமையாக இங்கிலிசில தான் இருக்கும். அநியாயமா பெயிலாக போற என்டு அதுக்கு பிறகு IT எண்டு சொன்னாலே ஓட வெளிக்கிடுங்கள்) பாடத் தெரிவின் போது ஆசிரியர்களின் அறிவுரை கட்டாயம் வழங்கப்பட வேண்டிய ஒன்று. (எங்களுக்கு சொன்னதா ஞாபகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்ல) சில ஆசிரியர்கள் எடுக்காதே என்றும் சொல்வார் ஏனெனில் அவர்களின் காலத்தில் அதற்கான தேவை இருக்கவில்லை. ஆனால் தற்போதைய நிலை வேற ஆங்கிலமொழி ஒரு பிரச்சினையாகக் கருதி தொகுதிப்பாடத் தெரிவில் IT இனை தவிர்ப்பவர்களிற்கு கூற விரும்புவது என்னவெனில் IT இதனூடு ஆங்கில அறிவினை வளர்த்துக் கொள்ள முடியும் ( எல்லா அனுபவம் தான்)

உயர்தரத்திலும் பாடத்தெரிவின் போது தகவல் தொழிநுட்பத்தினை ஒரு பாடமாக கருதுவதில்லை அதற்கான அவசியம் எனிவரும் காலங்களில் அவசியம். எனவே அதனையும் கருத்திற்கொள்ளவும். இது மாணவர்களிற்கு மட்டுமன்றி பெற்றோருக்குமே. எமது மாவட்டத்தை பொறுத்தவரை பல்கலைக்கழக தெரிவில் பல பாடநெறிக்கு வெற்றிடமாக காணப்படுவது வருந்தத்தக்க வேண்டிய விடயம். எம் அடையாளத்தை நிலைநாட்ட நம்மிடம் தற்போது இருக்கும் ஒரே ஒரு ஆயுதம் தகவல் தொழில்நுட்பத்தில் கவனம் எடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம். என்பதை கருத்திற்கொள்ளுங்கள் உங்கள் முயற்சி யாவும் வெற்றியில் முடிய எனது வாழ்த்துக்கள்.

ப.சர்மிளா

களனிப் பல்கலைக்கழகம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களின் உரிமைகளும் கடமைகளும்

சிறுவர்கள் என்ற வகையில் சமூகத்தில் அவர்களின் உரிமைகைளையும் கடமைகளையும் நோக்குமிடத்து

பெற்றோரின் உத்தமமான சொத்துக்கள் பிள்ளைகளாவார். பெற்றோருக்கு மட்டுமன்றி நாட்டினது மூலவளமாகவும் சிறுவர்கள் விளங்குகின்றனர். நடைமுறைச் சமூகத்தின் எதிர்காலச் சொத்தான சிறுவர்களைப் பேணிப் பாதுகாப்பது சமூகத்திலுள்ள அனைவரதும் கடப்பாடாகும். சமூகத்தில் அதிக அக்கறையைச் சிறுவர்கள் மீதுதான் செலுத்த வேண்டியுள்ளது. எனவே பிள்ளைகளை ஊட்டி வளர்த்தல், அரவணைத்தல், தம்மை விருத்தி செய்து கொள்வதற்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுத்தல், பெற்றுக்கொடுத்தல் என்பன மூத்தோரது கடமையாகும். சமகாலத்தில் சிறுவர்கள் என்போர் பதினெட்டு வயதிலும் குறைந்த இளைய பருவத்தினராவர். வளர்ந்தோரைப் போன்று சிறுவர்களுக்கும் உரிமைகள் உண்டு என்றாலும் சிறுவர்கள் மீதான உரிமைகளும் கடமைகளும் தனித்துவமானவையாகும். அவற்றில் சிலவற்றை நோக்குவோமாயின்

## சிறுவர்களின் உரிமைகள்

- உயிர் வாழ்வதற்கும் முன்னேறுவதற்குமான உரிமை
- நலன்களையும் பெற்றோரின் பராமரிப்பையும் பெறுதல்
- சுதந்திரமான கருத்து வெளிப்பாடு
- கல்வியைப் பெற்றுக்கொள்ளல்
- பெற்றோருடன் வாழுதல் மற்றும் அவர்களுடன் உறவு கொள்ளுதல்
- சமய கலாசார வழிமுறைகளை அனுபவித்தல்
- வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுதல்
- விளையாட்டு, பொழுதுபோக்கு நடவடிக்கையில் ஈடுபடல்
- சிந்தனை செய்தல், மனச்சாட்சியை பின்பற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர்களின் கடமைகள்

- பெற்றோருக்கு கட்டுப்பட்டு நடத்தல்
- சமூகத்தில் மூத்தோர்களை மதித்தல்
- பொதுச் சொத்துக்களை பாதுகாத்தல் பராமரித்தல்
- நல்லொழுக்கங்களை கடைப்பிடித்து வாழுதல்
- தலைமைத்துவத்திற்கு கீழ்படிந்து நடத்தல்.
- குடும்பத்தாரையும் அயலவர்களையும் நேசித்தல்.
- மூத்தோரை மரியாதை செய்தல்.
- குற்றச் செயல்களை தவிர்த்தல்.
- சமூக முன்னேற்றத்தில் பங்கெடுத்தல்.

மு.நிசா
கிளி/ ஜெயபுரம் ம.வி
A/L(2017)

*************************************************************

## நூலகம்

1. நூலகம் அறிவின் ஊற்றுமட்டுமன்றி அனுபவத்தின் ஊற்றாகவும் கூறப்படுகிறது.
2. அறிவை வளர்த்துக்கொள்ள உதவுகிறது.
3. நூல்கள் கூறும் வழியில் நமது வாழ்வை அமைத்துக்கொள்ள நூலகம் உதவுகின்றது.
4. நூலகத்தினால் நற்பழக்கம் வளரும்
5. நாட்டின் நல்லுறவு வளரும்
6. கவிதை சுவை புரியும்
7. கட்டுரையின் மான்பு விளக்க
8. படிப்பாளியாகவும் ஆகலாம் படைப்பாளியும் ஆகலாம்.
9. நூலகம் வழங்கும் பயனை வேறு எதுவும் வழங்காது.

செ. மதுவதனி
தரம் -07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய் தீர்க்கும் நூலகம்

அப்பொழுது நேரம் மாலை 6.00 மணி அப்பாவும் நானும் பேசிக்கொண்டே வீதியில் நடந்து சென்று கொண்டிருந்தோம். அந்நேரம் ஒரு வயோதிபர் மிகவும் தளர்ந்து அழுக்குப்படிந்த ஆடையுடன் எங்களை நோக்கி வந்த கொண்டிருந்தார்.

பார்ப்பதற்கு பலநாள் சாப்பிடாதவராகவும் தோற்றமளித்தார். கையில் சிறு பையுடனும் காலில் பாதணி எதுவும் இல்லாதவராகவும் காணப்பட்டார். எனது மனம் துடித்தது அம்முதியவருக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்ற உள்ளத்துடிப்பு அப்பாவுக்கும் அப்படித்தான் இருந்தது. எனவே அவர் எங்களை அணுகும் போது நான் அவரின் கைகளை பற்றிக்கொண்டேன். அப்பா அவரது தோள்களில் கையை வைத்து தலையை அன்போடு தடவினார் அப்போது அந்த முதியவர் தம்பி நான் பல்லராயன்கட்டு, பூநகரியிலிருந்து வருகிறேன். எனக்கு மனஉளத்தாக்கம் உள்ளது. இவ்வூரில் மிகவும் பிரசித்தி பெற்ற உளநல வைத்திய நிபுணர் ஒருவர் இருக்கிறாராம் என அறிந்து கொண்டேன். எனவே தான் நான் பேருந்து ஏறி பயணம் வந்தேன். அவரின் வீடு எங்கே இருக்கின்றது என்பதை அறியத்தருவீர்களா? என கனிவுடன் கேட்டார். அதற்கு அப்பா முதியவரே நீங்கள் சிகிச்சை பெற வேண்டிய வைத்தியரின் வீடு இவ்வூரில் தான் இருக்கிறது. வாருங்கள் உங்களை அழைத்துச் செல்கிறேன் என கூறினார்.

மறுநாள் காலை எனது அப்பாதான் அப்பெரியவரை அவரது வண்டியில் வைத்தியசாலைக்கு கூட்டிச்சென்றார். வைத்தியர் அம்முதியவரைப் பரிசோதித் பின்னர் உங்கள் நிலை ஆபத்ததான கட்டத்திற்கு வரப்போகிறது. இதை தடுக்க வேண்டுமென்றால் நான் கூறும் இலகுவான முறையைப் பின்பற்ற வேண்டும் என கூறினார். அதற்கு அம்முதியவரும் ஒப்புக்கொண்டார். நீங்கள் தினமும் உங்கள் ஊரிலுள்ள நூலகத்திற்குச் சென்ற மனநிறைவான புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் மற்றும் பல மனஅமைதி தரக்கூடிய நூல்களைப் படிக்க வேண்டும் என கூறினார்.

இதைக் கேட்ட முதியவரிற்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. நூலகம் சென்றால் மனஉளைச்சல் தீருமா? என்று அவருக்கு மனதில் சிரிப்பு வேறு எழுந்தது. ஒருவாறு சமாளித்துக்கொண்டு வைத்தியரிடமிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடைபெற்றுக் கொண்டு வந்தனர். பின் முதியவரை அவரின் ஊருக்கு அனுப்பிவிட்டு அப்பா எமது வீடு வந்து சேர்ந்தார்.

முதியவர் தனது ஊரிலுள்ள நூலகமான பல்லவராயன்கட்டு பொது நூலகத்திற்கு செல்லத் தொடங்கினார். தினமும் தவறாமல் சென்று வந்தார். அங்கு சென்று பற்பல புத்தகங்களையும், பத்திரிகைகளையும் படித்து வந்தார். நூலகம் செல்வதும் நாட்டு நடப்புக்களை அறிவதும் புதிய புதிய விடயங்களை அறிவதுமாக இருந்ததால் அவரின் சிந்தனை புத்தெழுச்சி பெற்றது. ஏனெனில் அவரின் வாசிப்பு திறமை மேலோங்கியிருந்தது. இதனால் அவரின் மனநிலையில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது.

ஒருநாள் வைத்தியரிடம் சென்று தனது நிலையினை கூறியபின் வைத்தியரின் சோதனையின் பின் முழுமையாக மனஉளைச்சல் தீர்ந்து விட்டதாகவும் இனி நிம்மதியாக இருக்கலாம் என வைத்தியர் கூறியதைக் கேட்டு முதியவர் ஆனந்தக் கண்ணீர் விட்டார்.

உளநிலை சீராகிய பின்பும் முதியவர் நூலகம் சென்று தனது வாசிப்புத் திறனை மேம்படுத்திக் கொண்டார். பின்னர் நூலக அதிகாரிகளிடம் கையெடுத்துக் கும்பிட்டு ஆனந்த கண்ணீர் விட்டார். தனது மோசமான வியாதிக்கு செலவில்லாத மருந்தாக இந்த நூலகம் விளங்கியுள்ளது என கூறினார்.

இந்த செய்தியை முதியவர் கூறியவுடன் எனக்கும் அப்பாவிற்கும் ஆச்சரியமும் சந்தோசம் ஒருங்கே தோன்றியது. நூல்நிலையங்கள் அறிவுபெறும் இடமாக மட்டுமல்லாது நோய் தீர்க்கும் இடமாகவும் விளங்குகின்றது என அப்பா எனக்குக் கூறினார்.

சு.அருந்தவச்செல்வி

தர்சிகா வீதி

ஜெயபுரம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாசிப்பை நேசிப்போம் !

" வீட்டுக்கு வெளிச்சம் தருவது சாளரம் புத்தகங்கள் இல்லாத வீடு, சாளரங்கள் இல்லாத சரித்திரம் போன்றது". நம்மை ஏமாற்றாத ஒரு சிறந்த நண்பன் புத்தகம் தான். நல்ல புத்தகங்களைப் படிப்பதால் அறிவு வளரும் உயர்ந்த சிந்தனைகள் பிறக்கும் எண்ணங்கள் நேர் பெறும் நமது ஆற்றல் பெருகும் திறமைகள் மிளிரும் உற்சாகம் ஊற்றெடுக்கும் சோர்வு அகலும் மனம் நிறைவு பெறும் முடிவுகள் எடுக்க புத்தகம் துணைபுரியும்! வாழ்க்கை மேம்படும்! முன்னேற வழி துலங்கும் !

அடிமைகளின் சூரியன் எனப் போற்றப்பட்ட ஆபிரகாம் லிங்கன் புத்தகங்கள் படித்தே உயர்ந்தவர். அவர் ஒரு தச்சுத் தொழிலாளியின் மகனாகப் பிறந்தார். தனது தீவிரப் படிப்பினால் தேசம் புகழத் திகழ்ந்தார்! "ஜார்ஜ் வாஷிங்டன் வரலாறு" என்னும் நூலை இரவல் வாங்கிப் படித்தார். அந்த நூல் அவர் மனதில் தான் எதிர்காலத்தில் அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக வர வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையை உருவாக்கியது. அந்த சிந்தனை அவரை அமெரிக்காவின் குடியரசுத் தலைவராகவும் உயர்த்தியது! இது வரலாறு நமக்கு கூறும் செய்தி.

லண்டன் நூலகத்தில் இருபது ஆண்டுகள் அரிய நூல்களைப் படித்து ஆய்வு செய்த காரல்மார்க்ஸ் உலகின் பொதுவுடைமைத் தந்தையாக உயர்ந்தார்.

"காஞ்சிபுரத்திலிருந்து முதுகலைப் பட்டதாரியான ஓர் இளைஞன் சென்னை நோக்கிச் சென்றான் முடிவில் தமிழகத்தின் முதல்வராகத் திரும்பினான்" – என்று பேரறிஞர் அண்ணாவைப் புகழ்வார்கள்! அவர் சென்னை கன்னிமாரா நூலகத்தில் உள்ள அனைத்து நூல்களையும் படித்தவர். நூலகம் திறக்கும் பொழுது உள்ளே நுழைந்து இரவு அடைக்கும் பொழுது வெளியே வருவார். அமெரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டபோது அவர் அரிதான நூல் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தார். அந்த நூல் முழுவதையும் படித்து முடிக்க வேண்டும் என்பதற்காக அறுவை சிகிச்சையையே ஒரு நாள் ஒத்திவைக்கும்படி மருத்துவர்களிடம் வேண்டுகோள் விடுத்தார். இது வாசிப்பின் மேல் வைத்த அவரின் நேசிப்பை உணர்த்துகிறது!

இந்தியாவின் தலைமை அமைச்சர் ஜவஹர்லால் நேரு "நான் மறைந்தபின் உடல் மீது மலர் மாலைகளை வைக்கவேண்டாம் என் மடி மீது புத்தகங்களைப் பரப்புங்கள்" – என்று கேட்டுக் கொண்டார்!.

இந்தியாவின் குடியரசுத் தலைவராக விளங்கிய டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் மாஸ்கோ நகருக்குச் சென்ற பொழுது தங்கும் விடுதியில் தனக்கு இரண்டு அறைகள் ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கூறினார். முதலில் அதிகாரிகளுக்கு ஒன்றும் புரியவில்லை. இருந்தாலும் இரண்டு அறைகள் ஒதுக்கப்பட்டன. அவர் அங்கு சென்ற பின்னர்தான் புரிந்தது. அவர் தங்குவதற்கு ஓர் அறை படிப்பதற்காக எடுத்துச் சென்ற புத்தகங்களை வைப்பதற்கு ஓர் அறை! இதுவும் வாசிப்பின் மீதான வரலாற்றுச் செய்தியல்லவா?.

புத்தகங்களை படித்தவர்கள் நாட்டுக்கு விடுதலை பெற்றுத் தரப் போராடியுள்ளர்கள் வரலாற்றை மாற்றி எழுதியுள்ளார்கள்! புத்தகங்கள் மட்டுமே நமக்கு ஏற்படுகிற பிரச்சனைகளைத் தீர்க்க நல்ல வழியை நயம்படச்சொல்லும்.

மனச் சோர்விலும் இறுக்கத்தில் உழலும் போதும் நல்ல புத்தகங்கள் அமைதியையும் தெளிவையும் வழிகாட்டுதலையும் ஆலோசனைகளையும் வழங்கும். நமக்கும் நமது வீட்டிற்கும் தேவையான பொருட்களை நாம் தவறாமல் வாங்குகிறோம். அதைப் போல நமது அறிவை வளர்த்துக் கொள்ளவும் வாழ்க்கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னேறவும் புத்தகங்களை வாங்கிப் படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். புத்தகங்கள் வாங்கிடத்தரப்படும் பணம் செலவு அல்ல மூலதனமாகும்! அது வட்டியை ஈட்டித் தருவதைப்போல அறிவைப் பெருக்கச் செய்யும் மூலதனம்!

புத்தகங்கள் படிக்க நேரம் இல்லை என்று பெரும்பான்மையோர் கூறுகிறார்கள். விமானம், பேருந்து, தொடர்வண்டி பயணத்தின் போது மருத்துவரை உயர் அலுவலர்களை தலைவர்களைச் சந்திக்க காத்திருக்கும் போதும் புத்தகங்கள் படிக்கலாம். நேரம் வீனாய்க் கழியாமல் பயன்படுத்திக் கொள்ளலாம். மேலும் புத்தகப் படிப்பிற்காக தினமும் ஒரு மணி நேரத்தை ஒதுக்கலாம்.

நாம் நமது நண்பர்களுடன் கேளிக்கைகளிலும், வீண் பேச்சுகளிலும், அரட்டைகளிலும் பொன்னான நேரத்தை வீணடிக்கிறோம். ஆனால் நம்மை உயர்த்திக் கொள்ள புத்தகங்களைப் படிப்பதற்கு மட்டும் நேரம் இல்லை என்று புலம்புகிறோம். இது வேடிக்கையாக இல்லை? எனவே நமக்கு கிடைக்கும் நேரத்தை வீணடிக்காமல் புத்தகங்களைப் படிப்போம்.

நூலகங்களுக்குச் சென்று, புத்தகங்களை எடுத்து வந்து படிக்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். குழந்தைகளையும் நூலகங்களுக்கு அழைத்துச் சென்று புத்தகங்கள் படிக்கும் ஆர்வத்தை அவர்களுக்கும் ஊட்ட வேண்டும்.

ஒவ்வொருவரும் புத்தகங்களை விலை கொடுத்து வாங்கி தங்கள் வீட்டில் சிறு நூலகம் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் மூலம் நமது குடும்பமே வாசித்து அறிவை வளர்த்துக் கொள்ள வாய்ப்பு ஏற்படும். புத்தகங்கள் நிறைந்த சூழலில் வளரும் குழந்தைகள் அறிவு உள்ளவர்களாகவும் தன்னம்பிக்கை நிறைந்தவர்களாகவும் இனிய பண்புள்ளவர்களாகவும் வாழ்க்கையில் முன்னேறத் துடிப்பவர்களாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குவார்கள்.

நல்ல புத்தகங்களைப் படித்து கெட்டுப் போனவர்கள் யாரும் உலகில் இல்லை. புத்தகங்கள் படிப்பதைக் கடமையாய்க் கொண்டவர்களும் வாசிப்பதை உயிர் என மதித்தவர்களும் மிக உயர்ந்த நிலையை அடைந்துள்ளார்கள்.

புத்தகங்கள் பெற்றோரைப் போல அறிவுரை கூறும் மனைவியைப் போலத் தாங்கி நிற்கும் மக்களைப் போன்று மகிழ்ச்சியளிக்கும் நெருங்கிய நண்பனாய் ஆலோசனை வழங்கும். அதனால் தான் அறிஞர் ரஸ்கின் "புத்தகங்களைப் போன்ற சிறந்த கருவூலம் வேறு எதுவும் மனிதனுக்கு இருக்க முடியாது" - என்றார். "ஒரு நூலகம் திறக்கப்படும்போது ஒரு சிறைச்சாலை மூடப்படுகிறது" என்பார் பேரறிஞர் விக்டர் ஹியுகோ. அறிவை விருத்தி செய்ய நல்ல புத்தங்களை நாளும் படிப்போம். வாசிப்பை நேசிப்போம். வாழ்க்கையிலும் பயன்படுத்துவோம். புத்தகங்களை காலமென்னும் அலை கடலின் ஓரம் உயர்ந்து நிற்கும் கலங்கரை தீபங்கள் என்போம்.

(நன்றி இணையம்)

திருமதி.நிருஜா தர்ஷாந்
(Dip in Com.Stu; aat.UK; Dip in Media Studies)
இணைய ஊடகவியலாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமர்சனம்

## அறம் திரைப்படம்

"அரசியல் பிழைத்தோருக்கு அறம் கூற்றாகும்" என்பத சிலப்பதிகாரம் சொல்லிக் கொடுத்த பாடம். அறம் படித்த தமிழ் சமூகத்திற்கு அரசியலிற்கும் அறத்திற்கும் இடைப்பட்ட தளத்தை கேள்வி கேட்கும் புதுவரவு "அறம்" திரைப்படம்.

ராக்கெட் விண்ணில் ஏவப்பட்ட கவுண்டன் ஓடிக்கொண்டிருக்கும் அதேசமயம் ஆழ்துளைக்கிணற்றில் விழுந்த குழந்தையை மீட்க மாவட்ட ஆட்சியாளர் மதிவதனி போராடிக்கொண்டிருக்கிறார். இரண்டும் ஒரே நேரத்தில் நடக்கிறது. ஒரே இந்தியாவில் சில கிலோ மீற்றர்களின் இடைவெளியில் நடக்கிறது. இந்த இரண்டும் ஒரே இந்தியாவா என்ற கேள்வி தான் அறத்தின் முதல் கேள்வி குழந்தை உயிருடன் மீண்டதா என்று பதில் சொல்கிறது. "அறம்" திரைப்படத்தின் கதை.

அடிப்படை வசதிகளை தவிர ஓட்டுப்பெட்டிகளும், ஓட்டுக்கேட்கும் அரசியல்வாதிகளும் மட்டுமே விரைவில் வந்துவிடக்கூடிய காட்டூர் கிராமம். படத்தின் சொர்க்க பூமி "தாகம் வராம இரக்கத்துக்கு ஏதாச்சும் சொட்டு மருந்து இருக்கா" என்று போராடி தாகத்தோடு வாழும் மக்களின் வாழ்வியல் சூழ்ந்த திரைப்படம். நிலத்தடியிலும். காற்றிலும் கூட நீரைக்காண முடியாமல் காலிக்குடங்களுடன் திரியும் மக்கள், தனிநபர் வளர்ச்சியை வெல்பொன்களில் காட்டும் டிஜிட்டல் மாலை. ஊரைத் தொலைத்துவிட்டு தொலைந்த ஊரில் தங்களை மீட்டெடுக்கும் விளிம்புநிலை வாழ்க்கை என படம் முழுவதும் காட்டப்படுகின்றன. சொர்க்க பூமியின் முகங்கள்

படத்தின் தொடக்கத்தில் "ராக்கெட்" ஏவப்படுவது குறித்து மக்களின் கருத்து கேட்கும் ஊடகங்களிடம்,"நம்ம நாடு ராக்கெட் விட்டது நமக்கு தானே பெருமை" என்பது தான் பெரும்பாண்மையான கருத்துக்கள் ஏன் ஏவப்படுகிறது என்பது அவர்களிற்கு தெரியவில்லை. இந்த அறியாமையில் இருந்து தொடங்குவது தான் Power Politics எனப்படும் அதிகார அரசியல் . இந்த அதிகார அரசியலுக்கு மக்களோடு மக்களாக ஒலிக்கும் குரலாக "அறம்" வந்திருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தப்படம் என்ன பேசுகிறது என்று கேள்வி எழுப்பலாம். அதற்கான பதில் இந்த படம் எதையெல்லாம் பேச வைக்கப்போகிறது என்பதில் இருக்கிறது. அரசியல்வாதிகள், அதிகாரிகள், ஊடகங்கள், மக்கள் என ஒவ்வொருவரும் இந்த கேள்வி பதிலின் ஏதோ ஒரு புறம் இருக்க வேண்டுமென்பது அரசியலமைப்பு "அதிகாரத்துஸ்பிரயோகம் பண்றது எவ்ளோ பெரிய குற்றமோ அத விட பெரிய குற்றம் நம்மகிட்ட இருக்க அதிகாரத்தை நல்லதுக்கு பயன்படுத்தாம இருக்கது" என்று சொல்லும் மதிவதனியின் அழுத்தத்தில் நிற்கிறது அறம். தனிமனித அலட்சியம், அரசியல், விளையாட்டு, அடித்தட்டு மக்களின் உணர்வு என அனைத்திலும் அறத்தின் சீற்றம் அதிகம்.

"அறம்" படம் இந்த ஆண்டின் மிகமுக்கியமான திரைப்படம் என்பதில் மாற்றுக்கருத்து இல்லையென்றாலும் ஒரு சமுதாய கருத்தோடு ஒரு வலிமையான பதிவாக வரும் திரைப்படங்களில் முக்கியமானதொரு இடம் அறம் படத்திற்கும் கொடுக்கப்பட வேண்டும். படத்தின் இயக்குனர் கோபி நயினார் இயக்குனராக புதிய முகமாக மக்களுக்கத் தெரிந்தாலும் உழைப்பத் தொலைந்த கலைஞனாக பல நேரங்களில் மக்களிடம் நியாயம் கேட்ட மனிதர். இந்த "அறம்" படத்தின் மூலம் அவருக்கான நியாயம் மீட்டெடுக்கப்படுகின்றது. பேய் படங்களுக்கும், அட்லட் காமெடி படங்களுக்கும் வரவேற்பு கூடிய காலகட்டத்தில் சமுதாயபர்பார்வை கொண்ட படங்கள் வெளியாவது அரிது. அதிலும் சொல்ல வந்த சமுதாய கருத்தை ஆணித்தரமாக பதிவு செய்வது மிக அரிது. எந்த பிசகுமில்லாமல் வியாபாரத்திற்கான சமரசம் இல்லாமல் படத்தைக் கொடுப்பது மிகமிக அரிது. அந்த மிக மிக அரிதான படமாக இந்த அறத்தை கொடுத்திருக்கிறார். இயக்குனர் கோபி.

ஒவ்வொரு படத்திற்கும் அதன் வெற்றியை படம் வெளியாவதற்கு முன்னரே அதன் முகத்தை வைத்தே கணிக்கின்றனர். அப்படி இந்த படத்தின் முதல் கலெக்டராக வரும் நயன்தாரா. விசாரணை கமிஷனில் தன் தரப்பு நியாயங்களை எடுத்து வைக்கும் போதும் போராடும் மக்களிடம் பேச்சு வார்த்தை நடத்தி கலையச் செய்யும் போதும் செய்திகளுக்குத் துடிக்கும் பத்திரிகைக்காரர்களிடம் கொஞ்சம் மனிதமும் பேசும்போது குழியில் விழுந்த குழந்தையின் பெற்றோருக்கு ஆதரவோடும் ஆறுதலாகவும் பேசும் போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அரசு அதிகாரியின் முகம் எப்படி இருக்க வேண்டுமென்று பிரதிபலிக்கிறது. அந்த முகம் தோற்றம், அதிகாரமிடுக்கு, வார்த்தை வீச்சு என அத்தனையிலும் மிளிர்கிறார் நயன்தாரா. படத்தில் மிக முக்கியமானவர்கள் பெற்றோராக வரும் ராமச்சந்திரன் -சுனு லட்சுமி தம்பதி அவர்களுக்குள் நடக்கும் பரிவுசார் பார்வை பிள்ளைகள் மீதான கனிவு குழந்தையை மீட்கப்போராடும் பாசம் என ஒவ்வொரு கட்சியிலும் கவனிக்க வைக்கிறார்கள்.

ஆழ்துளைக்கிணற்றில் விழுந்து இறந்த குழந்தைகளுக்கு சமர்ப்பணமாக வெளியாகியிருக்கும் இந்த " அறம்" படத்தின் உண்மையான வெற்றி இனி எந்த காலத்திலும் ஒரு உயிரைக்கூட அப்படி ஆழ்தணைகளுக்கு பலி கொடுத்தவிடக் கூடாது என்ற புரிதலில் விழிப்புணர்விலும் இருக்கிறது.

அரச இயந்திரத்திற்கு, அதிகாரிகளுக்கு, பொறுப்பற்ற தனிநபர்களுக்கு என அனைவருக்கும் இந்த புரிதலும் விழிப்புணர்வும் அவசியம் என்று ஓங்கி முரசறைகிறது. "அறம்" இது நிச்சயம் அரசியல் பேசும் படமல்ல. அரசியல் யாருக்கானதோ அவர்களே அரசியலாகவும் அரசாகவும் வேண்டும் என்று சொல்லும் படம்.

"அறம்" என்னும் தலைப்பிற்காக இயக்குனர் பிஷ்கினுக்கு படத்தில் நன்றி தெரிவிக்கிறார் இயக்குனர் கோபி. இது "அறம்'

**செ.பிரதீபன்**
**வைத்தியசாலை வீதி**
**ஜெயபுரம் தெற்கு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன்னை வளர்த்துக்கொள்

இருக்கிற நிலைகளை அப்படியே ஏற்றுக்கொண்டு நிரந்தரமாக அதே நிலையில் வாழவேண்டும் என்று யாரும் சொல்லவில்லை. இருக்கிற நிலைகளை நம் விரும்பப்படி மாற்ற முயல வேண்டும். அதுதான் முயற்சி, அதுதான் ஜீவனின் இயல்பு.

அதே போலதான், ஏழ்மையும் ஏழ்மை கடவுளின் விருப்பமல்ல நீ நிரந்தரமாக ஏழையாகவே இருக்க வேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. உன் மனதை உற்சாகமாக வைத்துக்கொள்வது எப்படி உன் கையிலிருக்கிறதோ, அதேபோல உன் உழைப்பால் சிந்தனையால் உன்விதியை நிர்ணயித்துக் கொள்வதும் உன்கையில் தான் இருக்கிறது.

நீ இளைஞன் முதலில் உன் வாழ்வை உயர் குணங்களால் வலிமையான பழக்கவழக்கங்களால் தன்னம்பிக்கை தரும் எணணங்களால் ஆழ்ந்த நம்பிக்கையால் உன்னை நீ உயர்த்திக்கொள்.

பின் நீ " இந்த சமுதாயத்தின்" உறுப்பினன் என்ற நிலையில் என்ன செய்ய முடியும் என்று எண்ணிப்பார் ஊருக்கு நன்மை செய்ய உன் வலிமையை வளர்க்க ஒரு அமைப்பை ஏற்படுத்திக்கொள்ள.

கூட்டு மனப்பான்மையுடன் இயங்க நண்பர்களுடன் சேர்ந்து நல்ல காரியங்களுக்கு கைகொடு. ஒரு முடிவெடுத்தபின் அம்முடிவை ஏற்கும் கட்டுபாட்டை வளர்த்துக்கொள். ஒரு காரியத்தை நிறைவேற்றும் கடும் உழைப்பைக்கொடு. மனதைச் சுதந்திரமாக மகிழ்வுடன் பறக்கவிடு. ஊர் உலக நன்மைக்காக நாம் நம்மை அர்ப்பணித்துக்கொள்ளும் போதுதான் இப்பிரபஞ்சத்துடன் சேர்ந்து இயங்குகிறோம்.

இளமைப்பருவ அனுபவங்களின் மீது பழிபோடுவதற்கு பதிலாக எங்கு செல்ல வேண்டுமென்று யோசி இலட்சியங்களில் கவனத்தை வை.

பிறருடைய அங்கீகாரத்திற்கோ பாராட்டுக்கோ எதிர்பார்த்து ஏங்கி நிற்கும் போது நாம் நம் சுயதன்மையைஂ இழந்த விடுகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி வர விரும்புகிறோமோ, தொழிலிலும் சரி சொந்த வாழிவிலும் சரி அதை மனதில் படம்பிடி துணிவுடன் காரியங்களைச் செய். பயப்பட வேண்டாம்.

"தைரியமும் தன்னம்பிக்கையும்" என்று கூறுவது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்து முத்திரை தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் கொள்.

நீ இருக்கும் அமைப்பிற்கு விசுவாசமாக நடந்த கொள். உன்னை முன்னிறுத்தாது பொது இலட்சியத்திற்காக மாபெரும் கூட்டுணர்வை வளர்த்துக்கொள் கட்டுப்பாட்டுடன் எப்போதும் இரு.

உன் திறமைகளை உனக்கும் இவ்வுலகிற்குமாக வெளிக்கொணர்ந்திடு. வாழ்ந்துகாட்டு . வாழ்த்துக்கள்.

கு..சபிதா
யாழ் பல்கலைக்கழகம்

*************************************************************

- ❖ மாவிலை கொண்டு பல் விளக்கினால் பற்கள் வலிமை அடையும்.
- ❖ தினமும் 8டம்ளர் சுத்தமான நீரைக் குடிக்க வேண்டும். அவ்வாறு தொடர்ந்து செய்து வருவதால் முகப்பரு. கண்வளையம் போன்றவை ஏற்படாது.
- ❖ முருங்கைக் கீரையை வாரத்தில் 3நாட்கள் சாப்பிட்டு வந்தால் தோல் சம்பந்தப்பட்ட தொந்தரவுகளை தவிர்க்கலாம்.
- ❖ பழச்சாறுகளைப் பிழிந்தவுடன் குடித்து விடுவது நல்லது. குளிர் சாதனப்பெட்டியில் வைத்து குடித்தால் சத்துக்கள் சிறிதளவு அழிந்து விடக் கூடும்.
- ❖ வெள்ளைத் தாமரைப்பூவை குடிநீர் தயாரித்து பருகி வந்தால் இரத்த மூலம், இருமல் குணமடையும்.
- ❖ அகத்திப்பூவுடன் பருப்பு சேர்ந்த கூட்டு செய்து சாப்பிட்டால் எலும்பும் பல்லும் உறுதியடையும்.
- ❖ காசித்தும்பைப் பூவின் சாற்றை பருகினால் சிறுநீர் சம்பந்தப்பட்ட நோய்கள் குணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்று வாழ்க!

ஆலமரமாய் உயர்ந்த நம் நூலகத்தின்
விழுதுகளாய் உயரும் வாசகர்களே!
கிளைபரப்பி நிழல் கொடுக்கும் - நம்
நூலகத்திற்கு தோள் கொடுப்பீர்!

வாசகராய் நூலகம் நுழைந்தீர்!
பாரும் போற்ற உயர்வீர்!
சென்ற ஆண்டும் இனிதே கற்றுக்களித்தீர்!
இன்வரும் காலமும் உமதே! சிறப்பீர்!
கல்வியில் உயர்ந்தீர்!
கலைகளில் தேர்ந்தீர்!
எண்ணிய முடிப்பீர்!
எதிரும் ஜெயிப்பீர்!

திண்ணிய செயலால்
சிறந்த நூலகத்தால்!
புதுயுகம் படைப்பீர்!
வாழ்வாங்கு வாழ்வீர்!

**க.கஜலக்ஷன்**
**கிளி/ஜெயபுரம் ம.வி**
**தரம் -07**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிஞர் வாக்குகள்

1. நல்ல புத்தகங்களை போன்ற நம்பிக்கை இந்த உலகில் இல்லை. (ஆங்கிலப் பழமொழி)
2. என்மனம் விரும்பும் நூல்களை கொடுங்கள் வாழ்நாள் முழுவதும் சிறையில் வாழ சம்மதிப்பேன். (மாஜினி)
3. பயன்படுத்தப்படாத புத்தகம் வெறும் காகிதக் கட்டுத்தான் (சீனப்பழமொழி)
4. நூலகமில்லாத ஊரை நான் ஒரு ஊராக மதிப்பதில்லை (லெனின்)
5. ஆயிரம் புத்தகங்களை வாசித்தவன் ஒருவன் இருந்தால் காட்டுங்கள் அவனே எனது வழிகாட்டி (ஜீலியஸ் சீசர்)
6. உலக வரைபடத்திலுள்ள மூலை முடுக்கெல்லாம் போக விரும்கிறாயா? ஒரு நூல் நிலையத்திற்கு செல் (டெஸ்கார்டஸ்)
7. உண்மையான வாசகன் வாசிப்பதை முடிப்பதே இல்லை. (ஆஸ்கார் வைல்ட்)
8. ஒரு எழுத்தாளன் ஒரு புத்தகத்தை தொடங்கி வைக்கின்றான்... .வாசகன் அதை முடித்து வைக்கிறான்.
9. நல்லதொரு புத்தகம் முடிவில்லாதது. அது பல அனுபவங்களைப் பற்றி உங்களுக்கு நினைவுபடுத்திக் கொண்டே இருக்கும்.
10. சில புத்தகங்களை சுவைப்போம்...சிலவற்றை அப்படியே விழுங்குவோம்... சிலவற்றை மென்று ஜீரணிப்போம் (பிரான்சிஸ் பேக்கன்)

செ.பவித்திரன்
தரம் -08



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வைப் பிரகாசிக்க செய்யும் வாசிப்பு

வாசிப்பு என்பது ஒரு மொழியைக் கற்றுக் கொள்வதற்கு உள்ள பிரதான வழிமுறையாகும். வாசிப்பு பழக்கம் நம்மில் ஏற்பட்டால் அந்தப் பழக்கத்திற்கு நாம் அடிமையாகி விடுவோம். பொதுவாக எந்தவொரு விடயத்திற்கும் அடிமையாவது நன்றன்று என கூறப்பட்டாலும் வாசிப்புப்பழக்கம் அதற்கு விதிவிலக்காகும். வாசிப்பு பழக்கத்தின் மூலம் வாழ்க்கைக்கு பல்வேறு நன்மைகள் ஏராளமாகக் கிடைக்கின்றன. வாசிப்புப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் பொதுவாக எந்தவிதமான கெட்ட பழக்கங்களுக்கும் அடிமையாவதில்லை. காரணம் வாசிப்புப் பழக்கத்தினால் கிடைக்கின்ற நல்ல விடயங்களின் மூலம் அவர்கள் செப்பனிடப்படுகின்றமையே ஆகும்.

## சத்தமாக வாசித்தல்

எழுத்துக்கள் வசனங்கள், பந்திகள் என்பவற்றை சத்தமிட்டு வாசிப்பதனால் மொழி உச்சரிப்புக்கான பயிற்சிகள் கிடைக்கும். எந்தவொரு மொழியினையும் கற்றுக்கொள்ளும் போது வாசிப்புடன் அதன் உச்சரிப்பும் மிகவும் முக்கியமான விடயமாக உள்ளது.

## அமைதியாக வாசித்தல்

மற்றவர்களுக்கு கேட்காதவாறு தமக்குள் வாசிப்பதனையே இது குறிக்கிறது. இதனை ஓர் உளவியல் சார்ந்த விடயமாக கருதலாம். கண்களால் எழுத்தக்கள் இனங்காணப்படுவதுடன் வாசிப்பதனை மனம் விளங்கி கொள்கின்றது. ஒரு விடயத்தினை விளங்கி வாசிப்பதற்கு இந்த முறை உதவும். அமைதியாக வாசிப்பதனால் யாருக்கும் தொல்லை ஏற்படுவதில்லை. எனவே அமைதியாக இருந்து வாசிக்கும் முறையினை சிறுவயது முதல் பழகிக் கொள்வது பயன்தரும்.

## கவனம் செலுத்துதல்

அமைதியாக வாசிக்கப்பழகுவதனால் ஒரு நோக்கம் தொடர்பில் கவனத்தை செலுத்துவதற்கான பயிற்சி கிடைக்கும் அருகில் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகங்களுக்குச் சென்று வாசிப்பதன் மூலம் சிறந்த பயிற்சிகளை பெற்றுக்கொள்ள கூடியதாக இருக்கும். அத்துடன் வாசிப்புப் பழக்கம் நம் நினைவுத்திறனையும் அதிகரிக்கும். அதாவது ஒரு புத்தகத்தை படிக்கும் போது அதிலுள்ள பல்வேறு விடயங்களை நாம் அறிந்து பதிந்து கொள்வோம். அவ்வாறு நாம் தொடர்ந்து வாசிக்கும் போது ஒவ்வொரு விடயமும் நம் மனதில் ஆழமாக பதிந்து தேவையான போது அவற்றை நினைவுபடுத்துவதாக அமையும்.

## அறிவு மற்றும் புரிதல்

பலதரப்பட்ட நூல்கள் பத்தரிகைகள் மற்றம் சஞ்சிகைகள் என்பவற்றை வாசிப்பதன் மூலம் குறுகிய காலப்பகுதியில் அதிகளவு அறிவினை பெறமுடியும். அவ்வாறான நாவல்கள், சிறுகதைகள், கவிதைப்புத்தகங்கள் ஆகியவற்றை வாசிப்பதனால் வாழ்க்கை பற்றிய புரிதல் அதிகரிக்கப்படுகின்றது.

## கற்றல் இலகுவாகும்

கல்வி கற்கும் போது பல்துறை சார்ந்த பாடங்களைக் கற்க வேண்டிய தேவை ஏற்படுவதோடு பல்வேறு மொழிகளை கற்பதற்கான இடமாகவும் திகழ்கின்றது. இங்கு வாய்ப்புக்கள் கிடைக்கின்றது. அத்துடன் வாசிப்பின் மூலம் மொழிகள் பற்றிய அறிவினையும் புரிதலையும் வளர்த்துக் கொள்ளமுடியும். மேலும் தாய்மொழி இதர மொழிகளை விருத்தி செய்துகொள்வதற்கு உள்ள ஒரே வழியும் வாசிப்பு பழக்கமாகும். அறிவு தாகம் ஏற்படும் போது நூலகம் சென்று பல விடயங்கள் தேடித்தேடி வாசிக்க தோன்றும். அதிகமாக வாசிப்பதனாலும் கற்றல் செற்பாடு மென்மேலும் சிறப்பாகதாக மாறும்.

## எழுத்தாற்றல் மற்றும் பேச்சாற்றல் அதிகரிக்கும

மொழித்திறன் என்பது வாசிப்பதும் எழுதுவதுமாகும். வாசிப்பு பல தரப்படட எழுத்தாற்றல்கள் இனங்காண உதவும். வாசிப்பு பழக்கம் உள்ளவர்களுக்கு எழுத்துத் திறமை இருக்கும். மேலும் அத்தகையோர் சிறந்த பேச்சாளராகவும் இருப்பார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயன் மிக்க ஓய்வு நேரம்

நேரம் பொன் போன்றது. ஆனால் அந்த நேரத்தை இன்று பலரும் தொலைக்காட்சி பார்ப்பதிலும் சமூக வலைத்தளங்களில் உலாவுவதிலும் வீணடித்துக்கொண்டு இருக்கின்றனர். அந்த நேரத்திற்கு நூலகம் சென்று ஒரு புத்தகத்தை வாசித்தோமானால் பல்வேறு விடயங்களைக் கற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். ஓய்வு நேரங்களில் புத்தகம் வாசிப்பதை வழக்கப்படுத்திக் கொண்டால் மனம் அமைதியடையும். சிறந்த நாவல்கள் சிறுகதைகள் நாடகங்கள் ஆகியவற்றில் வரும் பலதரப்பட்ட நிகழ்வுகளை வாசிப்பதன் மூலம் மன அமைதியடையும். சிறந்த ரசனை ஆற்றலையும் பெற முடியும். ஓய்வு நேரத்தை சிறப்பாக கழிக்க வாசிப்பு பழக்கத்தினைக் கடைப்பிடித்தால் மனதுக்கு மகிழ்ச்சி கிடைக்கும்.

க.வேணுஜா

யாழ் பல்கலைக்கழகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு காய்ச்சல் (Dengue Fever)

இன்று டெங்கு காய்ச்சல் ஆனது எம்மிடையே விரைவாக பரவி வருகின்ற காய்ச்சல் ஒன்றாகும். இது பல உயிர் இழப்புக்களை ஏற்படுத்துகின்றது.

டெங்கு காய்ச்சல் ஆனது Flari virus இனத்தைச் சேர்ந்த ஒரு வகையான வைரஸ் கிருமியால் ஏற்படுவது. இந்த வைரஸில் நான்கு வகையான பிறபொருள்களைக் கொண்ட (Anti gevic) வைரஸ் வகைகள் உண்டு.

இக்காய்ச்சல் ஆனது பெரும்பாலும் பகல் வேளைகளில் கடிக்கின்ற (Aedes aegypti) என்ற ஒரு வகையான பெண் நுளம்பால் பரவுகின்றது.

டெங்கு காய்ச்சல் ஏற்பட்ட ஒரு நோயாளி, அவருக்கு காய்ச்சல் ஏற்பட்ட முதல் மூன்று நாட்களில் அவரின் குருதியில் உள்ள வைரஸ் கிருமி அவருக்கு கடிக்கும் நுளம்பினால் உள்ளெடுக்கப்படுகின்றது. இவ் நுளம்பு சுகதேகி ஒருவரினை கடிப்பதன் மூலம் அவரின் குருதியினுள் வைரஸ் கிருமியினை உட்செலுத்தி டெங்கு நோயினை ஏற்படுத்துகின்றது.

வைரஸ் தொற்று ஏற்பட்ட ஒருவருக்கு நோய்க்குரிய அறிகுறிகள் ஏற்பட 5-6 நாள்கள் எடுக்கின்றது.

## நோய் அறிகுறிகள்

டெங்கு காய்ச்சல் பிரதானமாக இரண்டு வகைப்படும்

- சாதாரண டெங்க காய்ச்சல்
- இரத்தப் பெருக்குடன் கூடிய டெங்கு காய்ச்சல்

## சாதாரண டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள்

1. உயர் காய்ச்சல் - $104^{o}$ வரை உடல் வெப்பநிலை உயர்வடைதல்.
2. தீவிர தலையிடி
3. உடல் சோம்பல்
4. கண்ணின் பின்புறம் நோ
5. முகம் சிவந்து இருத்தல்.
6. கண் மடலின் உட்புறம் சிவந்து இருத்தல்.
7. உடல் நோ
8. குமட்டல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. வாந்தி
10. வாய் காய்தல்
11. நிணநீர் கணுக்களின் வீக்கம்
12. வயிற்றோட்டம்.

## இரத்தப் பெருக்குடன் கூடிய டெங்கு காய்ச்சலின் அறிகுறிகள்

1. வயிற்று நோ
2. வாயின் உட்புறத்திலும், கண்மடலின் உட்புறத்திலும் உடலிலும் சிவப்பு நிறப் புள்ளிகள் தோன்றுதல்.

## நோயின் ஆபத்தான அறிகுறிகள்

1. இரத்த வாந்தி அல்லது கோப்பி நிற வாந்தி
2. கறுப்பு நிற மலம் வெளியேறுதல்
3. குருதி அமுக்கம் குறைதல்

## பரிசோதனைகள்

காய்ச்சல் ஏற்பட்டு மூன்று நாட்களின் பின் காய்ச்சல் தொடரமாயின் அல்லது மேற்குறிப்பிட்ட நோய் அறிகுறிகள் ஏதாயினும் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியரின் உதவியை நாடி இரத்தப் பரிசோதனை செய்து கொள்ளல். இதன் மூலம் டெங்கு நோயை மற்றைய வைரஸ் நோய்களில் இருந்து வேறுபடுத்தி அறிவதுடன் அவற்றுக்கான உரிய சிகிச்சையையும் நோய் உக்கிரம் அடைவதற்கு முன் ஆரம்பிக்கலாம்.

குருதிப் பரிசோதனை

1. Full Blood count (FBC)

இதில் டெங்கு நோயின் மாற்றங்களாக வெண்குருதிச் சிறுதுணிக்கைகளின் (WBC) அளவு குறைவடையும்.

அதே வேளை (PCV) Packed cell volume உயர்வடையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. டெங்கு நோயினை சரியாக உறுதிப்படுத்துவதற்கு,
   1) டெங்கு Anti body test
   2) டெங்கு Virus PRC ret
   3) என்பன ஆகும்.

## சிகிச்சை முறை

இந்த நோய்க்கு உட்பட்டவர்களுக்கு எந்த விதமான விசேட மருந்துகளும் இல்லாத போதிலும் நோயாளி குடிக்கும் நீரின் அளவையும் வெளியேறும் சிறுநீரின் அளவையும் அவதானிக்க வேண்டும். மேற்குறிப்பிட்ட மருத்துவ முறையில் குணமாகாத நோயாளர்கள் இரத்தப் பெருக்குடன் கூடிய நோய் நிலைக்கு உள்ளாகின்றனர். இவர்களுக்கு விசேட மருத்துவக் கவனிப்பில் வைத்து பராமரிக்கப்படுகின்றான்.

## விசேடமாக டெங்கு நோயாளர்கள் கவனிக்க வேண்டியவை

1) வைத்தியர்களின் அறிவுக்கு ஏற்றபடி குடிக்கும் பான வகைகளின் அளவையும் வெளியேறும் சிறுநீரின் அளவையும் அளந்து வைத்தியருக்கு தெரியப்படுத்துதல்.
2) சிவப்பு நிறமான பான வகைகள் அருந்துதலை தவிர்த்தல்.
3) போதுமான அளவு ஓய்வு எடுத்தல் அவசியம்

## தடுப்பு முறைகள்

1) நுளம்புக்கடியில் இருந்து விடுபட உரிய முறைகளைப் பாவித்தல்
2) வீட்டையும் சுற்றுப்புறச் சூழலையும் துப்பரவாக வைத்திருத்தல்.
3) நீர்தேக்கி நிற்கும் வாய்க்கால்கள், சிறிய பாத்திரங்கள், பழைய ரயர்கள் குரும்பைகள் என்பவற்றை அகற்றுதல்.

**Dr.)Mrs) Gunavashan Mithuraja**
**Ayurvedic Medical Office**
**(BSMS)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திட்டமிடல் வெற்றிக்கான வழி

திட்டமிடல் என்ற பதமானது *Prevoyance* என்ற பிரான்ஸிய பதத்திலிருந்து பெறப்பட்டதாகும். இதன் பொருள் முன்னோக்கிப் பார்த்தல் (என்பதாகும். இன்னொரு வகையில் கூறின் திட்டமிடல் என்பது செயல்கள் அல்லது நடத்தைகளை மேற்கொள்வதற்குரிய தயார் நிலை எனலாம். பொது நிர்வாகவியலில் ஒழுங்கமைப்பு, ஆட்சேர்ப்பு போன்ற யாவும் திட்டமிடப்பட்டே மேற்கொள்ளப்படுவதினால்> இதனை எதிர்காலச் செயலுக்குத் தற்போது கையிருப்பிலுள்ள மக்கள் சக்தி, மூலப் பொருட்கள் என்பவற்றைச் சிக்கனமாகவும், திறமையாகவும் பயன்படுத்திப் பூரணத்துவம் பெறுவதற்கு உதவி புரியும் நிகழ்ச்சி நிரல் எனவும் கூறிக் கொள்ளலாம்.

திட்டமிடல் என்ற எண்ணக்கரு பொதுவுடமைக் கோட்பாட்டிலிருந்து பொது நிர்வாகவியலுக்குப் பெறப்பட்டதாகும். இப்பதம் இரண்டாம் உலகப் போருக்கு பின்னர் உலகின் பலபாகங்களிலும் பிரபல்யமடையத் தொடங்கியது. முறையான ஒரு திட்டமிடல் இன்றி நிர்வாக ஒழுங்கமைப்பும் திறமையாக செயற்பட முடியாது. திட்டமிடல் என்றால் என்ன? பொது நிர்வாகவியலில் இதன் பெறுமதி என்ன? என்பது தொடர்பாக பல அறிஞர்கள் கருத்துக் கூற முற்படுகின்றார்கள். டிமொக், டிமொக் என்பவர் 'அரசாங்க நிர்வாகத்தின் ஒவ்வொரு செயற்பாடும் திட்டமிடப்பட்டேயாக வேண்டும். அதாவது நோக்கங்கள், செயற்பாடுகள், ஒழுங்கமைப்புக்கள், நிதி, மேற்பார்வையிடுபவர்களுக்கான பொறுப்புக்கள், செயற்பாட்டு செயல் முறை இடைக்கால கொடுப்பனவு முறை, பொதுத் தொடர்பு, போன்ற அனைத்தும் திட்டமிடப்படல் வேண்டும்' என்கின்றார். எல்.டி. வைட் என்பவர் 'முன்னரே ஒப்புக் கொண்ட ஒரு கொள்கையை நிறைவேற்றவும், செயற்படுத்தவும் எடுக்கப்படும் உறுதியான நடவடிக்கைகளே திட்டமிடலாகும்' என்கின்றார். பிப்னர் என்பவர் 'கொள்கை, திட்டமிடல் என்பவைகள் இரண்டும் வேறுபட்டதல்ல, இவையிரண்டும் ஒன்றை ஒன்று சார்ந்துள்ளவையேயாகும்'. எனக்கூறுகின்றார். திட்டமிடலை கலோவே என்பவர் பின்வருமாறு வகைப்படுத்திக் கூறுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கொள்கைகளை முடிவு செய்தல் வேண்டும்.
2. கொள்கைகள் குறித்துத் தகவல்களை திரட்டி ஆய்வு செய்து அது தொடர்பாக எழும் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள வேண்டும்.
3. பின்னர் அப்பிரச்சினைகள் குறித்து எழும் மாற்று விளக்கங்களைத் தெளிவுபடுத்த வேண்டும்.
4. இம் மாற்று விளக்கங்களில் சிறப்பானதாகத் தோன்றுவதை எடுத்துக் கொண்டு அதன் அடிப்படையில் திட்டங்களை வகுக்க வேண்டும்.

என்கின்றார்

இதேபோல மிலற் என்பவர் திட்டமிடல் பின்வரும் நடைமுறைகளைக் கொண்டிருக்க வேண்டும் எனக் கூறுகின்றார்.

1. குறிக்கோள்களை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.
2. அக்குறிக்கோள்களை செயலுருவாக்கும் வகையில் மேற்கொள்ளும் சாதனங்களையும், வளங்களையும் மதிப்பீடு செய்தல்
3. செயல் நிகழ்ச்சி முறையை தயார் செய்து அதன் உதவியோடு குறிக்கோள்களை அடையும் திட்டங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

என்கின்றார்.

எனவே திட்டமிடலின் பண்புகளை பின்வருமாறு பட்டியல்படுத்திக் கூறலாம்.

1. பௌதீகத் திட்டமிடல்
2. சமூக பொருளாதார திட்டமிடல்
3. நிர்வாகத் திட்டமிடல்

திட்டமிடல் பல்வகைப்பட்ட இயல்புகளையுடையதாயினும், திட்டமிடலின் பொதுவான இயல்புகளின் அடிப்படையில் அதனை மூன்று பெரும் பிரிவுகளாக பிரித்து அணுக முடியும்.

**1. உயர் மட்ட நிர்வாகத் திட்டமிடல்:-**

திட்டமிடலானது அரசாங்கத்துடன் தொடர்புபடுகின்ற எல்லாத் திணைக்களங்கள், அவற்றின் பகுதிகள்; அமைப்புக்கள், யாவற்றையும் உள்ளடக்கி உருவாக்கப்படுவதாகும். இவைகள் தங்களுக்கென்று நிர்வாகத் தலைவரை கொண்டிருக்க வேண்டும். இத்தலைவர்கள் மந்திரிசபை உறுப்பினர்களின் வழி நடத்தலின் கீழ் செயற்பட வேண்டும். உயர் மட்ட நிர்வாக திட்டமிடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திணைக்களத் தலைவர்களின் கருத்துக்கள் ஆலோசனைகளுடன் மந்திரி சபை உறுப்பினர்களால் உருவாக்கப்படுகின்றது.

2. தேசிய சமூக, பொருளாதார திட்டமிடல் :-

இத்திட்டமிடல் ஒரு நாட்டின் முழு பொருளாதார நடத்தைகளையும் உள்ளடக்கியதாக காணப்படும். ஒவ்வொரு நாடும் தனது தேசியப் பொருளாதாரத் திட்டமிடலுக்கான இலக்குகளை வைத்திருக்கின்றது. இது நாட்டுக்கு நாடு வேறுபடலாம். திட்டமிடல்கள் தீவிரமான சமூக மாற்றத்தினை இலக்காக கொண்டு செயற்படல் வேண்டும். எம். எல். செத் *(M.L.Seth)* என்பவர் தேசிய பொருளாதாரத் திட்டமிடலை முழு அளவிலான திட்டமிடல், பகுதியளவிலான திட்டமிடல் என இரண்டாக வகுத்துக் காட்டுகின்றார்.

3. செயற்பாட்டுத் திட்டமிடல்:-

செயற்பாட்டு திட்டமிடல் நிர்வாக செயற்பாடுகளுடன் தொடர்புபட்டதாகும். உள்நிர்வாக ஒழுங்கமைப்பு செயற்பாடுகளுடன் தொடர்புபட்டே செயற்பாட்டுத் திட்டமிடல் உருவாக்கப்படல் வேண்டும். அமைப்பின் ஒவ்வொரு பகுதியும் என்ன செய்ய வேண்டும் என்பது திட்டமிடப்படல் வேண்டும். கொள்கைகள், இலக்குகள் என்பன அமைப்பின் ஒவ்வொரு பகுதியுடனும் இசைவடைந்து படிப்படியாக செயற்பாடு நோக்கி செல்லுதல் வேண்டும்.

திட்டமிடல் தொடர்பான இம் மூன்று வகைப்பாடுகளை விட, வேறு சிலர் பின்வருமாறு இதனை வகைப்படுத்துகின்றனர்.

1. கொள்கைத் திட்டமிடல்
2. நிர்வாகத் திட்டமிடல்
3. நிகழ்ச்சித் திட்டமிடல்
4. செயற்பாட்டுத் திட்டமிடல்
5. பிராந்திய திட்டமிடல்
6. மைய, பரவலாக்க திட்டமிடல்
7. தொழிற்பாட்டுத் திட்டமிடலும், அமைப்புத் திட்டமிடலும்.

திட்டமிடல் என்பது தானாகவே நிர்வாக விடயங்கள் அனைத்தையும் நிறைவேற்றி விடாது. கொள்கை வகுப்பாளர்கள் தமது இலக்கினை நிறைவேற்றிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கொள்ளப் பயன்படுத்தும் ஒரு கருவியே திட்டமிடலாகும். ஒரு நாட்டில் திட்டமிடல் வெற்றியளிக்க வேண்டுமாயின் அரசியல் உறுதிப்பாடு என்பது மிகவும் முதன்மையானதாகும். அதனையடையாத வரையில் எந்தவொரு நாட்டினதும் திட்டமிடலும் வெற்றியளிக்காது. எனவே திட்டமிடல் என்பது முடிவு எடுக்கப்பட்ட கொள்கைகளைச் செயல்படுத்துவதற்கு தேவையான, முறையான சாதனங்களைக் கொடுக்கும் ஓர் உபகரணமேயாகும். எனவே அரசாங்க நிர்வாகத்தின் ஒவ்வொரு அம்சமும் திட்டமிடப்பட்டேயாக வேண்டும்.

(நன்றி இணையம்)

ச.போல் தர்ஷாந் (Dip in Civ.Eng; Dip in Off.Mgt)

வருமான பரிசோதகர்

பிரதேச சபை, பூநகரி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையின் தோற்றம் சிறைச்சாலைகளின் மறைவும்

மனிதவள அபிவிருத்தியின் மையங்களாக விளங்கும் பாடசாலைகளில் கற்கின்ற மாணவர்களின் தனியாள் வேறுபாடுகளை அறிந்து அவர்களின் தேவைகளை இனங்கண்டு கற்றலுக்கு வழிகாட்டுவது பாடசாலையின் நோக்கமாகும். மாணவர்களின் எதிர்கால கற்றல் முய்றசிகளை ஊக்குவித்து அவர்கள் தாமே சிந்தித்து தாமே நியாயம் கண்டு தமக்கென பொருத்தமான தீர்மானங்களை எட்டுவதற்குரிய செயற்திறன் கொண்ட மனிதவளமாக மாற்றுவது பாடசாலையும், பொது நூலகமும் ஆகும்.

பெற்றோர் பிள்ளைகளின் வளர்ச்சிப் பருவத்தில் அதிக ஈடுபாடும் அக்கறையும் கொண்டுள்ளபோதிலும் அதனை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தும் பெரிய பொறுப்பில் விளங்குவது பாடசாலையும் , ஆசிரியர்களுமாகும். ஆசிரியர்கள் உயிரகளோடும் இணைந்து செயற்படுகின்ற உயிரிகளாவர்.

கற்றல் என்பது ஒரு சுமையாக இல்லாத வகையில் மாணவர்களை வழிநடாத்துபவராகவும் அன்பு, கருணை, இரக்கம் போன்ற உயர்ந்த விழுமியங்களை கொண்டவராகவும் மாணவர்கள் நிலைக்கேற்ப கற்பிப்பவராகவும் மாணவர்களுடன் சுமூகமான உறவைப் பேணுபவராகவும் இணைபாடவிதான செயற்பாடுகளில் மாணவர்களை அவர்களுக்கு பொருத்தமான வகையில் ஈடுபடுத்துபவராகவும் ஆசிரியர்கள் விளங்க வேண்டும். மனித நடத்தைகளை விளங்கி கொள்ளும் ஆற்றல் பாடசாலையின் இலக்கை அடைவதில் அக்கறை சிறந்த தொடர்பாடல் திறன் , பிறருக்கு முன்மாதிரியான நன்நடத்தை தீர்மானம் எடுக்கும் திறன், நடுநிலை சொல்லாக்கம், பேச்சாற்றல் தேவைக் கேற்ற மாற்றங்களை நடைமுறைப்படுத்தல், வளங்களை பொருத்தமாக ஒதுக்கீடு செய்து சிக்கனமாக பயன்படுத்தல், ஆடம்பரங்களை குறைத்தல், நேரமுகாமைத்துவத்திறன், பணிப்பாளர்களை அனுசரித்தல், நல்வார்த்தை பிரயோகம், எல்லா ஆசிரியர்களையும் சமமாகவும் உயர்வாகவும் மதித்தல் போன்ற சிறந்த நடத்தைக் கோலங்களை கொண்டவராக அதிபர்/ தலைமையாசிரியர் விளங்குகின்றனர். மேற்குறித்த விடயங்கள் பாடசாலையில் காணப்படாத விடத்து அந்தப் பாடசாலையை விரும்பிச் செல்லும் மாணவர்களது எண்ணிக்கை குறைவாக காணப்படும் காலத்துக்கு காலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக்குறைவு அதிகரிக்குமாயின் இறுதியில் பாடசாலை இந்தப் பிரதேசத்துக்கு அவசியமா? என்ற விளைவைத் தோற்றுவித்து இறுதியில் பாடசாலை மூடப்பட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்படவும் வாய்ப்புண்டு. இந்த நிலை தொடராது இருக்க பாடசாலை சமூகம் விழிப்புடனும் அக்கறையுடனும் இயங்க வேண்டும்.

ஒரு பாடசாலை மூடப்படுவது என்பது சாதாரண விடயமல்ல எவ்வாறாயினும் ஒரு பாடசாலை மூடப்படுவது சிறைச்சாலையொன்றை திறப்பதற்கு காரணமாக அமையாது இருக்க வேண்டும் என்பதுடன் பாடசாலை ஒன்று திறக்கப்படும் போது சிறைச்சாலை ஒன்று மூடப்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை

செ.லேஜினா
தரம் - 11
கிளி/ஜெயபுரம் மகா
வித்தியாலயம்

---

- ❖ பூவரசம் பூக்களை கஷாயம் வைத்து ஒரு நாளைக்கு 2தடைவைகள் பருகி வந்தால் விஷப்பூச்சிக்கடி குணமாகும்.
- ❖ நொச்சிப்பூவிலிருந்த குடிநீர் செய்த தினமும் 6முறை குடித்து வந்தால் இரத்த வாந்தி குணமாகும்.
- ❖ உடம்பில் கட்டி இருந்தால் பலாப்பூவை வேகவைத்து கட்டியின் மீது கட்டினால் கட்டி அப்படியே வற்றிவிடும்
- ❖ உலர்த்திய அவரைப் பூவடன் தேன் கலந்து பயன்படுத்தினால் வாய்ப்புண், வயிற்றுப்புண் குணமடையும்.
- ❖ பருத்திப் பூவை நன்றாக அரைத்து மஞ்சளும் சேர்த்து புண்கள் உள்ள இடத்தில் போட்டால் புண் மிக விரைவில் ஆறும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியத்தரு விந்தைகள்

**உலகில் புதுப்பிக்கப்பட்ட ஏழு அதிசயங்கள்**

உலகில் பல்வேறுபட்ட படைப்புக்களில் ஏழு அற்புத படைப்புக்களை 'நவீன உலக அதிசயங்கள் கழகம்' எனும் சுவிட்ஸர்லாந்து அமைப்பு தெரிவித்துள்ளது. மக்களின் அபிப்பிராயங்களின் அடிப்படையிலேயே இத்தெரிவு மேற்கொள்ளப்பட்டது. இதற்கு முன்னின்று செயற்பட்டவர் இந்த அமைப்பின் தலைவரான பேர்நாட் வெபர் என்பவராவார். இந்த ஏழு அதிசயங்களும் 2007ஆம் ஆண்டு ஜீலை மாதம் 7ம் திகதி (07-07-07) போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பன் நகரில் வெளியிடப்பட்டது.

**❖ ச்சிச்சென் இட்சா தொல்பொருட் பூமி**

ச்சிச்சென் இட்சா என்பது பூர்வீக கொலம்பிய தொல்லியல் விஞ்ஞான பூமியாகும். முராயன் கலாசாரத்தின் மகிமையை பறை சாற்றும் மாபெரும் பிரமிட்டுக்களால் நிர்மாணிக்கபட்டுள்ள இந்த பிரதேசம் மெக்ஸிக்கோ நாட்டில் அமைத்துள்ளது. இவ்விடயம் மாயன்களின் சமய வழிபாட்டு மையமாக விளங்கியதற்காக சான்றுகளை நாம் இன்றும் காணலாம்.

**❖ ரியோடி ஜெனைரோ நகர இயேசுகிறிஸ்து**

இந்த மாபெரும் இயேசுகிறிஸ்துவின் சிலையானது, பிறேசிலின் ரியோடி ஜெனைரோ நகரத்திற்கு அண்மையில் அமைந்துள்ள மலையின் உச்சியில் அமைந்துள்ளது. இதன் நிறை 635தொன்கள் ஆகும். இந்த சிலை இரட்சகர் இயேசுகிறிஸ்து என அழைக்கப்படுகின்றது.

**❖ சீனப்பெருஞ்சுவர்**

சீனப் பேரரசுக்கு வட திசையில் ஏற்படும் தாக்குதல்களைத் தவிர்ப்பதற்காக நிர்மாணிக்கப்பட்டதே சீனப் பெருஞ்சுவராகும். இது ஷெங்கைகவானில் இருந்து லொப்நூர் வரை 21,196 கிலோ மீற்றர் வரை நீண்ட செல்கிறது. இப்பெருஞ் சுவரைக் கட்டும் பணிகள் ஐந்தாம் நூற்றாண்டில் ஆரம்பமாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ **கோலோசியம் அரங்கு**

ரோமப் பேரரசர்கள் கட்டிய கட்டிடங்களிலேயே மிகப்பெரிய கொலொசியம் அரங்காகும். இது இத்தாலியின் ரொம் நகரில் அமைந்துள்ளது. கி.பி 72 ஆண்டுகளில் இந்த அரங்கம் மன்னர் வெஸ்பசினால் கட்டப்பட்டது. இங்கு ஒரே நேரத்தில் 50,000பேர் அமர்ந்து காட்சிகளை இரசிக்கும் வசதிகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

❖ **தாஜ்மகால்**

இந்தியாவில் அக்ரா நகரில் உள்ள யமுனை நதிக்கரையில் வெள்ளைப் பளிங்குக் கற்களால் கட்டப்பட்ட தாஜ்மஹால் ஆனது முகாலய மன்னரான ஷாஜகானின் அன்பு மனைவியான மும்தாஜ்ஜின் நினைவாக கட்டிய நினைவுச்சின்னம் ஆகும். இந்த கட்டடம் முகலாய சாம்ராச்சியத்தின் மகிமையை பறைசாற்றுகின்றது. இதன் கட்டடப் பணிகள் 1631 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்டன.

❖ **மாச்சு பிச்சு சிதைவடைந்த நகரம்**

மாச்சு பிச்சு என்பது இன்கா நாகரிக மக்களின் மகிமையை உலகிற்கு உணர்த்தும் சிதைவடைந்த நகரமாகும். இது கடல் மட்டத்திலிருந்து 2400மீற்றர் உயரத்தில் பேரு நாட்டில் "உருபம்பா" எனும் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. இந்த நகரத்தை அமெரிக்க வரலாற்று நிபுணரான ஹிராம் பின்கம் அவர்கள் 1911 ஆம் ஆண்டளவில் கண்டுபிடித்திருந்தார்.

❖ **பெட்ரா கற்சிற்பம்**

ஜோர்தானில் 'எருபாஹி ஹோரா் எனும் மலைப்பிரதேசத்தில் அழகிய இளஞ்சிவப்பு நிறம் கலந்த கட்டத்தையே 'பெடரா' எனும் பெயரில் அழைக்கின்றனர். இக்கட்டடம் 1812ம் ஆண்டு சுவிட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த நாடுகாண் பயணியான ஜோன் லட்விக் பர்க்ஹாட் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது.

ஹீர்த்தனா பரராஜசேகரம்
பிரதேச சபை
பூநகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றுமை

ஒற்றுமை என்றால் என்ன? பழமொழி ஒன்று ஞாபகத்திலேயே உள்ளது. ஆம் அடம்பன்கொடியும் திரண்டால் மிடுக்கு. ஒற்றுமை ஓங்கினால் நாம் மிடுக்குடன் வாழலாம். ஒற்றுமையே பலம் ஏற்றுக்கொள்கின்றேன். ஒற்றுமை பற்றி நான் இங்கு சொல்லவரவில்லை காரணம் என்னைச்சூழ ஒற்றுமை இன்மைகளே தலைவிரித்தாடும் போது எப்படி என்னால் ஒற்றுமை பற்றி எழுதத் தோன்றும்.

நாட்டுக்குநாடு, இனத்துக்கு இனம், மொழிக்கு மொழி, மதத்திற்கு மதம், கல்விக்கு கல்வி, பொருளாதாரத்திற்கு பொருளாதாரம் என எங்கு பார்த்தாலும் பாகுபாடு ஏற்றத்தாழ்வுகளும் போட்டி பொறாமைகளும் நிறைந்து காணப்படுகிறது. எங்கே நாம் மகிழ்ச்சிகொள்ளக் கூடிய வகையில் ஒற்றுமை இருக்கிறது? ஏன் எம் குடும்பங்களுக்குள் கூட இந்த ஒற்றுமை ஊற்றெடுக்கிறதா? இல்லையே! பிரிவினைகளையே இன்று சுமந்து நிக்கிறது எனலாம். பொருளாதார முன்னேற்ற நாடுகளை எடுத்துக்கொண்டால் எங்கோ ஒரு மூலையில் குடி நீருக்கேவசதி இன்றி அல்லலப்படும் மக்கள் ஏராளம். கட்டிடங்களும் கனரகங்களும் கணனிகளும் எமக்குள் ஒற்றுமையையே போதிக்கின்றன? இன்னும் கொஞ்சமாய் இருக்கக்கூடிய ஒற்றுமையையும் தவிடுபொடியாக்கிவிட்டுப் போகிறது. கோட்டும் காற்சட்டையும் போட்டு எத்தனையோ பேர் சமாதான விருதுகளை தம்வசமாக்கினார்களே அன்றி யாராவது நிரந்தர அமைதியை ஏற்படுத்தினார்களா என்ன. தொலைக்காட்சிகளும் வானொலிகளும் கணனிகளும் பெருமையாக ஒலிபரப்பிய போது ஏன் நாட்டின் அவலம் நிறைந்த வாழ்வு என்னை கண்கலங்கச் செய்தது. சமாதான நோபல் பரிசில்களை தம்வசமாக்கியவர்களால் எம் நாட்டின் அவலம் நிறைந்த வாழ்வு அவர்களின் கண்களுக்கு புலப்படாமல் போனது ஏன்? பூமிப்பந்தெங்கணும் தமிழினத்தின் கைரேகைகள், திறமைசாலிகள், புத்திசாலிகள், இவர்களுக்குள் ஒற்றுமை ஓங்கியோ உள்ளது. இல்லையே.

குடும்ப உறவை எடுத்தால் கணவன் மனைவிக்கிடையில் விவகாரத்துக்கள் என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுவதை புள்ளி விபரங்கள் தொட்டு நிக்கிறது. ஏன்? விட்டுக்கொடுக்கும் மனசு சகிப்புத்தன்மை புரிந்துணர்வற்ற சகிப்புத்தன்மை புரிந்துணர்வற்ற நிலையே இவற்றுக்கெல்லாம் காரணம். கணவனைத்தாக்கும் மனைவியும் மனைவியை துன்புறுத்தும் கணவன்களுமாக ஒற்றுமை படுகுழிக்குள் போய்க்கொண்டிருக்கிறது. ஏன் இந்த சகோதர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகளில் கூட இன்று விரிசல்கள் தோன்றிய வண்ணம் தானே காணப்படுகிறது. ஒற்றுமை இன்மைக்கு காரணம் ஏற்றத்தாழ்வு நிறைந்த பொருளாதார அமைப்பு உயிர்களை நேசிக்காத கொடுமையும் விட்டுக்கொடுக்காமலே பழக்கப்பட்டுப்போன மனசும், சகிப்புத்தன்மை அற்ற சிந்தனையும் மற்றயவர்களின் உணர்வுகளை புரிய மறுக்கும் கொடுமையும். யார் முதலில் விட்டுக்கொடுத்து இறங்கிப்போவது என்கின்ற பிடிவாதகுணமே எம்முள் ஒற்றுமை சிதற காரணமாகிறது. இதற்கு நாம் என்னசெய்யலாம்.? முடியாத என்ன! நிறையவே இருப்பதாக ஆய்வுகளும் அறிக்கைகளும் எமக்கு சற்று மன ஆறுதலைத்தருகிறது. இவற்றை நாம் உற்றுநோக்க வேண்டியவர்களாகவும் அதை கருத்தில் பதித்து செயற்படுத்த வேண்டியவர்களாகவும் எம் கடமை விரிகிறது.

பாடசாலை ஒவ்வோர் வகுப்பறைகளிலும் ஒற்றுமையை வலியுறுத்தக்கூடிய வாசகங்களையும் அதன் தார்பரியம் பற்றியும் எழுதி நிலையாக வைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதேபோல் பொது இடங்களிலும் நாம் செய்யத்தயாராக இருக்க வேண்டும். அடுத்து குழந்தை கர்ப்பப்பையிலேயே இருக்கும் போது ஒற்றுமையை எடுத்து விளக்கலாம் என ஆய்வுகள் கூறுகிறது. அதை நாம் ஏன் இனி வரும் காலங்களில் செயல்படுத்தக்கூடாது!. இதை எல்ரோருக்கும் தெரியப்படுத்துவதன் மூலம் இனி ஒரு குழந்தைக்கு தாய் தந்தையாகும் தம்பதிகள் இதை கருத்தில் கொண்டால் தொலைத்துக் கொண்டிருக்கும் ஒற்றுமை வலுப்பெற உதவுவதோடு உலகின் எல்லா உயிர்களும் ஒற்றுமையாய் வாழ வழிசமைக்கும். பல இனத்தின் ஒற்றுமைதான் அந்த நாட்டின் ஒற்றுமை. ஒவ்வொரு நாட்டின் ஒற்றுமை தான் இந்த பிரபஞ்சத்தின் ஒற்றுமை. அப்படி ஒரு உலகை சமைக்க ஒன்றாய் மனமொருமித்து இந்த ஆண்டில் சபதம் எடுப்போம்.

க.வக்சலா
அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச சபை பூநகரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லவராயன் கட்டு வரலாற்றுக் குறிப்பு

இந்தியாவில் இருந்து பல்லவராய மன்னன் 18 தொழில் சார்ந்த தொழிலாளிகளுடனும் மற்றும் பரிவாரங்களுடனும் பல்லவராயன் கட்டு பிரதேசத்தில் ஆட்சியை அமைத்தான்.

அவனது ஆட்சியின் எல்லைகளாக "வடக்கே மண்டக்கல்லாறும் தெற்கே முழங்காவிலும் கிழக்கே வன்னேரியும். மேற்கே பொன்னாவெளியுமாக காணப்பட்டன.

சிற்றரசனாக வந்த இவனது ஆட்சிக்காலத்திலே வடக்குப்பகுதியான "அரசபுரம் எனும் நிலப்பரப்பினை"அல்லிராணி" எனும் இளவரசி ஆட்சி புரிந்ததாகவும் தெற்குப் பகுதியான "மாந்தை " எனும் நிலப்பரப்பினை "கரிகாலன்" எனும் சிற்றரசன் ஆட்சி புரிந்தாக வரலாறுகள் மூலம் தெரிய வருகின்றது.

சிற்றரசனான பல்லவராயன் 18 வகையான தொழில்களின் தொழிலுக்கு தனது ஆட்சியின் வளர்ச்சி கருதி முன்னுரிமை அளித்தான். இருப்பினும் இந்த தொழிலாளிகளின் உணவுத் தேவையினை பூர்த்தி செய்வதற்காக விவசாயத்திற்கு முன்னுரிமை அழித்தி 18 வகையான தொழிலாளிகளிற்கும் 18 வகையான குளங்களை நிர்மானித்தான்.

இவற்றிற்கான ஆதாரங்கள் தற்போது அப்பிரதேசங்களில் காணப்படுகின்றது. அதன் அடிப்படையில் பல்லவராய மன்னன் ஆட்சிக்காலத்தில்" பல்லவராயன் கட்டு சந்திக்கருகாமையில் கொல்லர் தொழிலாளிகளுக்காக **கொல்லாங்குளமும்,** சோளநிலா தெற்குப்பக்கம் ஆபரணத் தொழிலாளிகளுக்காக **பத்தன்குளமும்** தற்போது கரியாலை நாகபடுவாள் குளத்திற்க்குள் விக்கிரக தொழிலாளிகளுக்காக **நாகபடுவான்குளமும்** மற்றும் குஜவ தொழிலாளிக்காக **கரியாலை குளமும்,** மற்றும் வேட்டைக்காரர்களுக்காக (காவலாளிகள்) **பண்டிவெட்டிக்குளமும்,** பல்லவராயன் கட்டு குளக்கட்டு ஐயனார் கோவிலுக்கருகாமையில் வேடுவர் தொழிலாளிகளுக்காக **வில்வெட்டிக்குளமும்,** தற்போது சோமர்கமம் பகுதியில் அமைந்துள்ள தேவர் பரம்பரையினர் (ஆலய தொண்டர்கள்) காக **தேவன்குளமும்,** தற்போது வன்னேரிப் பகுதியில் அமைந்துள்ள வாத்தியத் தொழிலாளிகளுக்காக வன்னேரிக்குளமும், தற்போது வன்னேரி சோலைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமர் கமம் பகுதிக்கும் இடையில் முதலியார் பரம்பரையினருக்காக **மண்ணியா குளமும்,** தற்போதைய 5ம்வாய்க்கால் பகுதியில் விவசாய பரம்பரையினருக்காக **ஐயன்பெருமாள் குளமும்,** தற்போதைய 16ம் வாய்கால் அருகாமையில் உடையார் பரம்பரையினருக்காக **பூதவுடையார் புளியங்குளமும்,** தற்போது பண்டிவெட்டிக் குளத்திற்குள் பூமாலை கட்டும் தொழிலாளர்களுக்காக **கரம்பைகட்டுக்குளமும்,** பழைய குமுளமுனை அருகாமை சலவை தொழிலாளிகளுக்காக **வண்ணாம்புட்டிக்குளமும்,** தற்போது நாச்சிக்குடா சந்திக்கருகாமையில் வர்த்தகர்களுக்காக நாச்சியார் குளமும் தற்போது பொன்னாவெளி பிரதேசத்தில் பிராமணர் பரம்பரையினருக்காக **ஈச்சனவெளிக்குளமும்** தற்போதைய பூநகரி கடற்தொழிலாளிகள் கூட்டுறவு சமாசத்திற்குப் பின்னால் பன்னவேலைத் தொழிலாளிகளுக்காக **பன்னாமோட்டைக் குளமும்,** தற்போது பல்லவராயன் கட்டு சம்புவெளிப்பகுதியில் கால்நடை மேய்ப்போருக்காக **சின்னவன்முறிப்புக் குளமும்** தனது தேவைக்காக **பல்லவராயன்கட்டுக் குளத்தினையும்** அமைத்தான்.

இவ்வாறு தொழிலாளிகளின் வாழ்வாதாரத்தினையும் தனது ஆட்சியினையும் கருத்தில் கொண்ட தனது ஆட்சியினை பல்லவராயன் கட்டு மண்ணில் சிறப்பாகவும், செல்வச் செழிப்புடனும் ஆட்சி புரிந்து வந்துள்ளான் என அறியப்படுகின்றது.

அத்துடன் இறை நம்பிக்கை கொண்ட பல்லவராய மன்னன் சில ஆலயங்களை ஆதரித்து வந்துள்ளதாக அறியப்படுகின்ற போதிலும் அதன் அடிப்படையில் பல்லவராயன் கட்டுப்பிள்ளையார், வன்னேரிக்குள ஐயனார் ஆலயங்களை குறிப்பிடலாம்.

தொடர்ந்து மேலத்தேயர்களின் ஆட்சி மேலோங்க மக்கள் மத்தியில் மதமாற்றங்கள் இடம் பெற்றதோடு தேவாலயங்களும் அமைக்கபட்டு சேதமாக்கட்டடிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

அத்துடன் சிறு கோட்டைகளினையும் அமைந்திருக்கலாம் என்பதற்கான சான்றுகள் மற்றும் சிதைவுகளினை "சுண்ணாவில்" பல்லவராயன்கட்டு முழங்காவில் பகுதிகளில் காணக்கூடியதாக உள்ளது.

தொடர்ந்து 1948ம் ஆண்டு மேலைத்தேயர்களிடம் இருந்து இலங்கை முழுமையாக சுதந்திரம் அடைந்த பின்னர் பல்லவராயன்கட்டுப் பிரதேசம் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராம சங்கமாக செயற்பட்டு வந்துள்ளது. இதன் பிரதான காரியாலையம் மண்ணியா குளப்பகுதியில் காணப்பட்டதாகவும். தொடர்ந்து இக்கிராம சங்கம் இரண்டு பிரிவுகளாக செயற்பட்டு வந்தது.

அதன் அடிப்படையில்

1. பல்லவராயன்கட்டு கிராமசங்கம்
2. இரணைதீவு கிராம சங்கம்

என்பனவாகும். இக்கிராமசங்கத்தின் ஆரம்ப தலைவரினை "சுக்கிராசனர்" என அழைக்கப்பட்டார்

மேலும் 1960ம் ஆண்டு மத்திய வகுப்புத்திட்டத்தின் கீழ் முழங்காவில் பகுதியில் மக்கள் குடியமர்த்தப்பட்டனர். பின் 1957ம் ஆண்டு தமிழ் காங்கிரஸ் கட்சியின் இலங்கை பாராளுமன்ற உறுப்பினராக "குமாரசாமி அவர்களின் (சாவகச்சேரி தொகுதி) காலப்பகுதியில் கரியாலை, நாகபடுவான் போன்ற குளங்கள் இணைக்கப்பட்டு காரியாலை நாகபடுவான் குளம் என அழைக்கப்பட்டது.

தொடர்ந்து 1967ம் ஆண்டு பண்டிவெட்டி குளமும் கரியாலை நாகபடுவான் குளத்துடன் இணைக்கப்பட்டது. மேலும் பல்லவராயன்கட்டு, நாகபடுவான், பொன்னைவெளி, கிராஞ்சி, வேரவில், குமுளமுனை போன்ற கிராமங்களில் பூர்வீக குடிகளைத்தவிர 1963ம் ஆண்டு வடக்கின் ஏனைய மாவட்டங்களில் இருந்து சிறிய தொகையான குடிகள் பல்லவராயன்கட்டு பிரதேசத்திலும் குடியமர்த்தப்பட்டதுடன் இம்மக்களுக்கு 2 ஏக்கர் நெற்காணியும், 2ஏக்கர் மேட்டுக்காணியும் வழங்கப்பட்டது. மேலும் 1983ம் ஆண்டு பல்லவராயன்கட்டு பகுதியில் மலையக மக்களை ஜெயபுர கிராமத்தில் காணி, வீடு, குடிநீர் வசதியுடன் குடியமர்த்தப்பட்டனர்.

இவ்வாறானவே பல்வராயன் கட்டு பிரதேசம் தொடர்பான வரலாற்றுக் குறிப்பு காணப்படுகின்றது.

**தரவு வழங்கியவர் :- செல்லையா கனகசபை மூதாதையர்**
**பல்லவராயன்கட்டு**

**தகவல் பெறுனர் :- இரத்தின்சிங்கம் பார்த்தீபன்**
**:- குமாரலிங்கம் துவாரகன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண பல்கலை தொல்லியற்பிரிவு பேராசிரியர் ப.புஸ்பரட்ணமும் அவருடைய மாணவர்களும் இணைந்த மேற்கொண்ட ஆய்வின் அடிப்படையில்

# நாகபடுவானில் கண்டறியப்பட்ட புராதன குடியிருப்பும் வழிபாட்டு மையமும்

பூநகரிப் பிரதேச நிர்வாக எல்லைக்கு உட்பட்ட முழங்காவில் குமுழமுனை வட்டாரங்களுக்கு இடைப்பட்ட நாகபடுவான் என்ற பாரம்பரிய கிராமத்திற்கு உட்பட்ட காட்டுப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வில் கிடைத்து வரும் நம்பகத்தன்மை வாய்ந்த ஆதாரங்கள் வரலாற்றிலக்கியங்களில் புகைபடர்ந்திருக்கும் வட இலங்கையின் பூர்விக வரலாறு பற்றிய பல கேள்விகளுக்கு விடை கூறுவதாக உள்ளன.

இந்த அகழ்வின் போது அடையாளம் காணப்பட்ட மூன்று கலாசார மண் அடுக்குகளில் பல்வேறு காலகட்டத்தைச் சேர்ந்த மட்பாண்டங்களை கண்டுபிடிக்க முடிந்தது மூன்றாவது கலாசார மண்அடுக்கில் ஒரு சில மட்பாண்டங்களுடன் பெருமளவு சுடுமண் உருவங்களும், கழிவிரும்புகளும் (Iron Slakes) கண்டுபிடிக்கப்பட்டன. இது அக்கால மக்களின் சமய நமம்பிக்கையை பிரதிபலிப்பதாக உள்ளன. அச்சுடுமண் உருவங்களில் பீடத்தின் மேல் அமர்ந்திருக்கும் இரு தெய்வங்களின் சிலைகள் சிறப்பாக குறிப்பிடத்தக்கன.

இச்சிலைகளின் தலைப்பாகங்கள் பெருமளவு சிதைவடைந்த நிலையிலேயே காணப்பட்டன. அவற்றிடையே கிடைத்த நட்சத்திர வடிவிலான தோடணிந்த காதுகள், தாடைப்பகுதிகள் பண்டைய கால மக்களின் கலைமரபையும் உயர்ந்த கலைத்திறனையும் புலப்படுத்துவதாக உள்ளன.

மேலும் சில கைகள் உடைந்த நிலையில் கிடைத்துள்ளன. சிலவற்றின் உள்ளங்கைகளில் திரண்ட மும்மணிகள் காணப்படுகின்றன. இவற்றை நோக்கம் போது பலகரங்கள் கொண்ட தெய்வச் சிலைகளாக இருந்திருக்கலாமென எண்ணத் தோன்றுகிறது.

பல அளவுகளில், வடிவங்களில் அமைந்த நாக உருவங்கள், ஆமையின் வடிவம், அகல்விளக்கு, ஆலயமணி, எருதின் உருவம், யானை, குதிரைகளின் உடற்பாகம், இலிங்கவடிவம், சட்டிகள், தட்டுக்கள், அவற்றின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளிம்பில்படுத்துறங்கும் நாகபாம்பின் உருவம் என்பன இவ்விடம் பண்டைய கால மக்களின் வழிபாட்டு மையமாக இருந்திருக்கலாம் என கருத முடிகிறது.

இரு, சுடுமண் அச்சுக்களின் ஒரு பக்கத்தில் பண்டைய கால எழுத்துக்கள் காணப்படுகின்றன.

இவ் ஆய்வுப் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட சமய வழிபாட்டு மையத்தின் வடிவம் இதுவரை இந்தியாவிலோ அல்லது இலங்கையிலோ கண்டுபிடிக்கப்பட்டதாக தெரியவில்லை.

அகழ்வுப் பகுதியின் மையத்தில் சிறிய வாழ்ப்பகுதியை உடைய பெரிய மண்பானையும் அதன் மேற்பகுதியில் கவிழ்ந்த நிலையில் ஒட்டி வைக்கபட்ட சிறிய கலசங்களும் உள்ளன. இப்பானையைச் சுற்றி சுடுமண்ணாலான சதுரவடிவமான மூன்று பீடங்களும் அப்பீடங்களில் அமர்ந்திருந்த தெய்வ அல்லது மனித உருவத்தின் கால்கள் இப்பானையை தொட்ட நிலையில் காணப்படுகின்றது. தலைப்பகுதிக்குரிய முடிகள், காதுப்பகுதிகள் மட்டும் கிடைத்திருப்பதால் இவ்வுருவங்கள் மனிதனா, தெய்வமா என உறுதிப்படுத்த முடியவில்லை.

அடுத்து நடுவிலுள்ள பானையை ஒட்டி மண் சட்டியின் விளிம்பில் படமெடுத்த நிலையில் ஐந்து தலைநாகம் காணப்படுகிறது. பானைக்குள் இருந்த மண்ணை அகற்றிப் பார்த்தபோது அதற்குள் சுடுமண்ணாலான நாக உருவத்தைக் காண முடிந்தது. அத்துடன் பானையின் அடிப்பக்கம் விட்டமாக துவாரமிடப்பட்டு அதன் அடிப்பகுதி நிலத்துடன் பொருந்துமாறு புதைப்பட்டுள்ளது. பானைக்குள் இருந்த நாக உருவம் மண்ணில் நடப்பட்டு அதை மூடி பானை வைக்கபட்டிருக்கலாம் என்பதை பாம்பின் வடிவம் உறுதி செய்கிறது.

பானையின் விளிம்பைச் சுற்றி கவிழ்ந்த வடிவில் உள்ள சிறிய கலசங்களை பாம்புப் புற்றில் வரும் சிறிய துவாரங்களாகவும் பானையின் சிறிய வாய்ப்பகுதி பாம்பு புற்றிலிருந்து வெளியேறும் வழியெனவும் குறிப்பிட்டு பிற்காலத்தில் பாம்புப்புற்றை நாக தெய்வத்தின் ஆலயமாக படையல் செய்து வழிபடும் மரபு தோன்றுவதற்கு முன்னோடியாக இந்த பூர்வீக வழிபாட்டு மரபு நாகபடுவானில் கண்டபிடிக்கபட்ட வழிபாட்டு மையம் உறுதிப்படுத்துகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு நாகபடுவான் என்ற பெயரே நாகத்தை குலமரபாகக் கொண்ட மக்கள் வாழ்ந்ததன் அடையாளமாகும். படுவம், படுவான் என்பது பழமையான தமிழ்ச்சொல். இது சங்க இலக்கியத்தில் ஆழமான குளம் பெரிய குளம் என பொருள்பட்டுள்ளது. நாககுளம் என்ற சொல்லே நாகபடுவான என மருவியுள்ளதாக கூறலாம். இதற்கு இம்மையத்தை ஒட்டியதாக உள்ள அழிவடைந்துள்ள கானாமோட்டைக்குளம் சிறந்த சான்றாக உள்ளது.

நாகபடுவானில் கண்டுபிடிக்கப்பட்ட புராதன குடியிருப்பும் வழிபாட்டு மையமும் ஈழத்தமிழரின் பூர்வீக வரலாறு. பண்பாடு பற்றிய ஆய்வுகளுக்குக் கிடைத்த முக்கிய சான்றுகளாகக் கொள்வதில் எதுவித சந்தேகமும் இல்லை எனலாம்.

க.ஜானுஷா

யாழ் பல்கலைக்கழகம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org